Uri மாநிலத்தில் புதிதாகக் குடியேறும் ஆண்கள் / - பெண்களுக்கான தகவல்கள்

# எம்மிடம நல்வரவாகுக!

KANTON URI



# உள்ளடக்கம்


| | |
|---|---|
| முன்னுரை | 3 |
| சுவிசின் மூன்று திணைக்களப் படிகள் | 4 |
| Uri | 5 |
| அடிப்படைப் பெறுமானம் | 6 |
| தங்குவதற்கான விதிகள் | 7 |
| வசித்தல் | 8 |
| தொழில் | 10 |
| வரிகள் | 12 |
| சமூகப் பாதுகாப்பு | 13 |
| சுகாதாரம் | 15 |
| பாடசாலை மற்றும் உயர்கல்வி | 16 |
| பிள்ளை | 19 |
| திருமணம், பிறப்பு மற்றும் இறப்பு | 20 |
| நாளாந்த வாழ்க்கை மற்றும் ஓய்வுநேரம் | 22 |
| நடமாடுதல் | 23 |
| மொழி மற்றும் மொழிகற்கும் வசதிகள் | 24 |
| விடுமுறை நாட்கள் | 25 |
| உதவக்கூடிய முகவரிகள் | 26 |


01.01.2016

# Willkommä bi yys!



எம்மிடம் நல்வரவாகுக!

நீங்கள் Uri யில் வாழ்வதற்கு முடிவுசெய்துள்ளீர்கள். இது எம்மை மகிழ்விக்கின்றது! ஏனென்றால் எமது மாநிலம் வேற்று மனிதர்களை உள்வாங்கிக்கொள்வதை நூற்றாண்டுகாலப் பாரம்பரியமாகக் கொண்டுள்ளது.

Gotthard க்குப் பக்கமாக Uri இருப்பதற்கு நன்றி கூறுகிறோம் ஏனென்றால் இது காலாகாலமாக ஐரோப்பாவின் ஒரு முக்கிய கடந்து செல்லும் பிரதேசமாக உள்ளது. வரலாற்றில் மில்லியன் கணக்கான மக்கள் Uri யைக் கடந்து சென்றுள்ளனர் சிலர் இங்கேயே தங்கிவிட்டனர். அவர்களின் சிந்தனைகள் மற்றும் அவர்களின் அயராத செயற்பாடுகளால் Uri யை இன்றுள்ள நிலைக்கு உயர்வதற்குப் பங்களித்துள்ளனர்: அதாவது இதை சுவிஸ் நாட்டின் ஒரு நவீனமான மற்றும் உயிர்த்துடிப்பான பகுதியாக ஆக்கியுள்ளனர். Uri கவர்ச்சிகரமான வசிப்பிடத்தை வழங்குவதுடன், நல்ல போக்குவரத்துத் தொடர்புகள் மற்றும் ஒரு மிகத் திறமையான கல்வித்திட்டத்தைக் கொண்டுள்ளது –அத்துடன் இது வியக்கத்தக்க அழகுமிகு மலைப்பிரதேசத்தில் அமைந்துள்ளது

இந்த அழகுமிகு மாநிலத்தில் மக்கள் பல்வேறு கலாச்சாரங்களிலிருந்து வந்துள்ளனர். ஆனால் அனைவரும் ஒருவரோடு ஒருவர் புரிந்துணர்வு மற்றும் வெளிப்படையாகப் பழகிக்கொள்வதைக் கவனத்திற் கொள்வர். எமக்கு ஒரு சமுதாயமாகச் செயற்படுவதில் மிக உயர்வான மதிப்பு உள்ளது. ஆகவேதான் Uri யில் பல்வேறு கழகங்கள் உள்ளன. அவை தனிப்பட்ட தொடர்புகளை ஏற்படுத்தி அதைப் பேணுவதற்கான எண்ணிலடங்காத சந்தர்ப்பங்களை வழங்குகின்றன.

இவ்வாறான சந்தர்ப்பங்களை நீங்கள் பாவித்துக்கொள்ளுங்கள். நீங்கள் விரைவாக எம்மிடம் வசதியை உணரவும் மற்றும் சமுதாயத்தில் ஆர்வத்துடிப்புடன் பங்குபெற வேண்டும் என நாம் விரும்புகின்றோம். நீங்கள் தொழில் ரீதியாகவும் அதேபோன்று தனிப்பட்ட ரீதியிலும் வெற்றிபெறவும், உங்கள் சிந்தனைகள் மற்றும் அயராத செயற்பாடுகள் எமது மாநிலத்தின் சாதகமான வளர்ச்சிக்குப் பங்களிக்க வேண்டும் என நாம் விரும்புகின்றோம். இப் பிரசுரம் உங்களுக்கு இதற்கு உதவுவதோடு உங்கள் Uri மாநிலம் குறித்த முக்கிய தகவல்களை உங்களுக்கு வழங்கும்.

புதிய தாயகம் உங்களுக்கு ஒரு நல்ல ஆரம்பமாக அமைய நாங்கள் வாழ்த்துகின்றோம்.

பீயெற் யோர்க் / Beat Jörg
ஆட்சிமன்ற உறுப்பினர்



# சுவிஸ் திணைக்கழ ரீதியானமூன்று படிக்கட்டுமான நிலைகள்

சுவிஸ் 26 மாநிலங்களாப் பிரிக்கப்பட்டுள்ளதுடன் மத்திய அரசு அல்லது கூட்டாட்சி என அழைக்கப்படுகின்றது.

Uri மாநிலம் 20 நகரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு, மாநிலம் மற்றும் நகரங்களுக்கு வித்தியாசமான கடமைகள் உள்ளன.

### மத்திய அரசுக்கு எவ்வித கடமைகள் உள்ளன?

மத்திய அரசு பொறுப்பு வகிக்கும் கடமைகள், முழு சுவிசிற்கும் ஒரேவிதமானவைகளாக அமைந்திருக்கும். இது உதாரணமாக வெளிநாட்டு அரசியல் அல்லது வெளிநாட்டு ஆண்கள் மற்றும் பெண்கள் இங்கு தங்கியிருத்தலை ஒழுங்குசெய்தல் போன்றவைகளும் அடங்கும்.

### மாநிலங்களுக்கு எவ்வித கடமைகள் உள்ளன?

மாநிலம் பொறுப்பு வகிக்கும் கடமைகள், அனைத்து நகரங்கள் தொடர்பானதாகும். உதாரணமாக வைத்தியசாலைப் பராமரிப்பு, பொலிஸ் அல்லது தொழிற்கல்வி போன்றவைகள்.

### நகரங்களுக்கு எவ்வித கடமைகள் உள்ளன?

- வசிக்கும் அனைத்து பெண்கள் மற்றும் ஆண்களைப் பதிவுசெய்தல்
- மக்கள் பாடசாலை தொடக்கம் பிறிமார்- மற்றும் உயர்தரத்தை ஒழுங்குசெய்தல்
- வசிக்கும் பெண்கள் மற்றும் ஆண்களுக்கு சமூக உதவிப் பணத்தை வழங்குதல்
- அடிப்படை வசதிகளைக் கவனித்தல் அதாவது தண்ணீர் வழங்குதல் மற்றும் குப்பை அகற்றுதல் போன்றவை
- மேலதிகமானவை


### மத்திய அரசைக் கையாள்வதில் யார் முடிவெடுக்கின்றனர்?

சுவிசில் வாழும் பெண்கள் மற்றும் ஆண்களுக்கு மிக உயர்ந்த ஜனநாயக உரிமை உள்ளது. அவர்கள் நாடாளுமன்றம் மற்றும் அரசைத் தெரிவுசெய்வது மட்டுமல்லாமல், முக்கிய விடங்களின்போது கேள்விகள் இருப்பின் ஒழுங்கான முறையில் வாக்களித்து முடிவுசெய்கின்றனர்.

Uri மாநிலம் குறித்த தகவல்கள்:
**Kantonale Verwaltung Uri**
6460 Altdorf
Telefon: 041 875 22 44
E-Mail: info@ur.ch
www.ur.ch

**உங்களுக்குத் தெரியுமா, Uri மாநிலத்துடன் Schwyz, Obwalden மற்றும் Nidwalden ஆகியவையும் சுவிஸ் கூட்டாட்சி அரசை அமைத்த முதலாவது மாநிலங்கள் என்பது?**

# Uri




| நகரங்கள் | வசிப்பவர்கள் தொகை |
|---|---|
| Altdorf | 8‘700 |
| Schattdorf | 4‘922 |
| Bürglen | 3‘919 |
| Erstfeld | 3‘752 |
| Silenen / Amsteg / Bristen | 2‘302 |
| Flüelen | 1‘948 |
| Seedorf | 1‘714 |
| Attinghausen | 1‘596 |
| Andermatt | 1‘270 |
| Spiringen / Urnerboden | 900 |
| Unterschächen | 727 |
| Seelisberg | 656 |
| Gurtnellen | 620 |
| Isenthal | 532 |
| Wassen / Meien | 435 |
| Göschenen / Göscheneralp | 430 |
| Sisikon | 390 |
| Hospental / Zumdorf | 186 |
| Bauen | 186 |
| Realp | 150 |

வசிக்கும்மக்களின் தொகை 2009 இறுதியில 35‘335
நிலப்பரப்பு 1‘077 km²
மாநிலத்தலைநகரம Altdorf

நகரங்களின் இணையத்தளங்கள்:
www.ur.ch > Behörden > Gemeinden

உங்களுக்குத் தெரியுமா, Uri மாநிலம் Graubünden, Tessin, Wallis, Bern, Obwalden, Nidwalden, Schwyz மற்றும் Glarus மாநிலங்களை எல்லைகளாகக் கொண்டுள்ளதென்பது?

# அடிப்படைப் பெறுமதிகள்

### எனது உரிமைகள் மற்றும் கடமைகள் எவை?

சுவிஸ் மற்றும் அதனுடனான Uri மாநிலமும் சுதந்திரம், உரிமைகள் மற்றும் கடமைகளை ஒவ்வொருவரும் கடைப்பிடிப்பதைப் பெறுமதி மிக்கதாகக் கருதுகின்றன. இதற்கான நிபந்தனைகளாக ஒருவரை ஒருவர் கவனித்துக் கொள்வது மற்றும் புரிந்துணர்வு அதேபோன்று சேர்ந்து வாழ்வதில் சமமான அடிப்படைப் பெறுமதிகளை ஏற்றுக்கொள்வதுமாகும்.

**விபரமான அடிப்படைப்பெறுமதி மற்றும் உரிமைகள்**

- மனிதரின் மாண்பு மதிக்கப்பட வேண்டும்.
- சட்டத்தின் முன்பாக அனைத்து மனிதரும் சமனாகும்.
- ஆண் மற்றும் பெண் சமத்துவமானவர்கள்
- சுதந்திர உரிமை
- எங்கு சக மனிதர்களின் சுதந்திரம் ஆரம்பிக்கின்றதோ, அங்கு தனி நபர்களின் சுதந்திர உரிமை முடிவடைகின்றது.

**பிரதானமான கடமைகள்:**

- வரி செலுத்தும் கடமை
- மருத்துவக்காப்புறுதி செய்து கொள்வது மற்றும் கட்டணம் செலுத்துவது
- தொழில் செய்வோர் மற்றும் சொத்துக்கள் வைத்திருப்போர் சமூகக் கொடுப்பனவுகளைச் செலுத்துதல்
- கட்டாய பாடசாலைக் காலத்தைக் கடைப்பிடித்தல் மற்றும் பாடசாலை மற்றும் ஆசிரியர்களுடன் சேர்ந்து செயற்படல்

மத்திய அரசு குறித்த தகவல்கள் மற்றும் மத்திய சட்டவாக்கம்:
www.admin.ch

சுவிஸ் குறித்த தகவல்கள்:
www.ch.ch

### புதிதாகக் குடியேறும் ஆண்கள்/- பெண்களிடம் என்ன எதிர்பார்க்கப்படுகின்றது?

Uri மாநிலத்தில் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார வாழ்வில் நீங்கள் உங்களை ஈடுபடுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. சமுதாய நடை-முறை மற்றும் சுவிசின் வாழ்க்கை நிபந்தனைகளை சீர்தூக்கிப்பார்ப்பதுடன் விசேடமாக டொச் மொழியைக் கற்பது அவசியமாகின்றது.

**இதற்காக உங்களுக்குப் பல சந்தர்ப்பங்கள் உள்ளன:**

- அயலவருடனான உறவைப் பேணுவது
- ஒரு சங்கத்தில் அங்கத்தவராவது
- நகரத்தின் அல்லது மாநிலத்தின் நிகழ்வுகளில் பங்கேற்பது
- ஊரியின் பாராம்பரிய நிகழ்வகளில் பங்கெடுப்பது
- கலாச்சார, விளையாட்டு அல்லது சமூகப் பகுதிகளில் சுயவிருப்பில் உதவுதல்
- ஒரு டொச் வகுப்பிற்குச் செல்லுதல்

**உங்களுக்குத் தெரியுமா, சுவிஸ் மக்களில் 50 % மானோர் ஒரு சங்கத்தில் ஆர்வமானதுடிப்புடன் சேர்ந்து செயலாற்றுகின்றாரென?**

# வசிப்பதற்கான ஒழுங்குமுறைகள்

### நான் எதைக் கடைப்பிடிக்க வேண்டும்?

வெளிநாட்டு நபர் ஒருவர், ஒரு நாட்டுக்கு உள்வரும் செல்லுபடியான அனுமதியுடன், சேர்ந்து வாழுதவற்கான- அல்லது வதிவிட அனுமதியுடன், Uri மாநிலத்தில் நீண்ட காலத்துக்குத் தங்கியிருக்க விரும்பினால், அவர் கட்டாயமாக 14 நாட்களுக்கு உள்ளாக அவரது புதிய நகரத்திலுள்ள வசிப்பவர்களைக் கண்காணிக்கும் அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும். இதற்கு முன்பாக நீங்கள் பழைய வீட்டின் பதிவை நீக்க வேண்டும். உள்வருதல், சேர்ந்து வாழுதவற்கான- அல்லது வதிவிட அனுமதியுடன் பதிவு செய்வதற்கு இரண்டு நிழற்படங்கள் மற்றும் கடவுச்சீட்டு அல்லது அடையான அட்டை தேவைப்படும். குடிவரவாளர்களுக்கான திணைக்களம் பதிவிற்குப் பின்னர் உங்களுக்குப் புதிய வதிவிட அனுமதியை தருவார்கள்.



### நான் எதை வசிக்கும் நகரத்தில் பதிவுசெய்ய வேண்டும்?

- மாநிலத்திற்கு உள்ளாக அல்லது நகரத்துக்கு உள்ளாக வீடு மாறுவதை
- மாநிலத்திலிருந்து மாறும்போது/ வெளியேறும்போது பதிவை நீக்குவதற்கு

தொழில் மற்றும் குடிவரவுக்கான திணைக்களம்/ குடிவரவுக்கான பகுதி
**Amt für Arbeit und Migration/Abteilung Migration**
www.ur.ch/migration

குடிவரவுக்கான அரசசெயலர் (SEM)
**Staatssekretariat für Migration (SEM)**
www.bfm.admin.ch > Themen > Einreise
www.bfm.admin.ch > Themen > Aufenthalt

### எனது குடும்பமும் என்னுடன் உள்வரலாமா?

நீங்கள் EU/EFTA என்ற ஓர் நாட்டின் பிரஜையாக இருந்து, போதுமான அளவில் வீடும் இருந்தால், நீங்கள் உங்கள் குடும்ப உறுப்பினர்களை சுவிசிற்கு பின்பு அழைத்துக் கொள்ளலாம்

குடும்ப உறுப்பினர்கள் எனும்போது கணவன் அல்லது மனைவி, இதுவரை 21 வயதை அடையாத பிள்ளைகள் அல்லது பேரப்பிள்ளைகள் அத்துடன் அவர்களின் வாழ்க்கைச்செலவு எப்படி கொடுப்பதென வழிவகுக்கப்பட்டிருக்க வேண்டும். அதுபோலவே பெற்றோர் பேரன்பேத்திமார், அவர்களின் வாழ்க்கைச் செலவு எப்படி கொடுப்பதென வழிவகுக்கப்பட்டிருக்க வேண்டும்.

அனுமதிக்கப்பட்ட உயர்கல்வி கற்பவர்கள் தமது கணவன் அல்லது மனைவியை மற்றும் தமது பராமரிப்பிலுள்ள பிள்ளைகளை மட்டுமே சுவிசிற்கு பின்பு அழைத்துக் கொள்ளலாம், அதாவது அவர்களின் வாழ்க்கைச்செலவு எப்படி கொடுப்பதென வழிவகுக்கப்பட்டிருக்க வேண்டும்.

நீங்கள் EU/EFTA நாட்டிற்கு வெளியே உள்ள பிரஜையாக இருந்து, நீங்கள் கணவன் அல்லது மனைவியை மற்றும் 18 வயதுக்கு உட்பட்ட திருமணமாகாத பிள்ளைகளை பின்பு அழைத்துக்கொள்ளலாம், இருப்பினும் குடும்பம் ஒன்றாக வாழ வேண்டும் என்பதுடன் தேவைக்கேற்ற வீட்டு வசதி இருக்க வேண்டும். தற்சமயம் நீங்கள் சமூக உதவிப் பணத்தில் வாழ்பவராக இருப்பின், குடும்பத்தை இங்கு அழைப்பது சாத்தியமற்றது.

குடும்பம் ஒன்றிணைவதற்கான வசதியை 5 வருடங்களுக்கு உள்ளாக செயற்படுத்த வேண்டும். 12 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளை கட்டாயமாக 12 மாதங்களுக்குள் அழைத்துவிட வேண்டும்.

**உங்களுக்குத் தெரியுமா, தங்குமிட அனுமதி விடயத்தைக் கவனிப்பது உள்ளே பயணிக்கும் நபருடையது என்பது?**

# வசித்தல்

### எப்படி நான் ஒரு வாடகை வீட்டைப் பெற்றுக்கொள்ளலாம்?

வாடகை வீட்டை நீங்கள் பெறலாம், அதற்கு நீங்கள்:

- பத்திரிகையில் வரும் விளம்பரங்களில் மற்றும் இலவசப்பத்திரிகையான «Uristier» ல் தேடுவது அல்லது
- இதற்காக விசேடமாக வெளியிடப்படும் இணையத்தளப் பக்கங்களை வாசிப்பது அல்லது
- நேரடியாக வீட்டு முகவர்களிடம் கேட்பது

### வசிக்கும் வீட்டின் வாடகையாளருக்கு எது முக்கியமகாத் தெரிந்திருக்க வேண்டும்?

வழக்கமாக எழுத்துமூலமான ஒரு வாடகை ஒப்பந்தம் எழுதப்படும், இதில் வாடகை வீட்டின் அளவு, வாடகைக் கட்டணம், வெளியேறுவதற்கான தவணை, வாடகை முற்பணம், பொதுவான நிபந்தனைகள் மற்றும் இல்ல ஒழுங்குகள் அடங்கியிருக்கும். வாடகை வழக்கமாக முன்பாகவே அடுத்து வரும் மாதத்துக்கு செலுத்தப்படும். அதிகமாக வாடகைக்கு இருப்பவரே ஏற்படும் மேலதிக செலவுகளையும் செலுத்த வேண்டும், உதாரணமாக வீட்டைச் சூடாக்குதல், தண்ணீர் அல்லது கேபிள் தொலைக்காட்சி போன்றவைகள். உங்கள் வாடகைக் கட்டணம் மேலதிகச் செலவுகளையும் அடக்கியுள்ளதா அல்லது அது மேலதிகமாகச் செலுத்த வேண்டுமா என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்!

வீட்டைக் கையளிக்கும்போது அதாவது உள்ளே வரும்போது மற்றும் வெளியேறும்போது வாடகைக்கு வழங்குபரோடு ஒன்றுசேர்ந்து வீட்டின் நிலை-மையை பரிசோதிப்பதுடன் அனைத்துப் பழுது-களையும் எழுத்து வடிவமாக பதிவுசெய்யுங்கள் என விதந்துரைக்கப்படுகின்றது (சிறு பழுதுகளாக இருந்தாலும்!)

வாடகை முற்பணம் என்பது ஆகக் கூடியது மூன்றுமாத வாடகைத் தொகையாகும், இது வாடகைக்கு வீடு வழங்குவோருக்குப் பாதுகாப்பாக முன்கூட்டியே ஒரு வாடகை முற்பண வங்கிக்கணக்கில் வைப்புச்செய்யப்படும். இந்தக் கணக்கு வாடகை செலுத்துவோரின் பெயரிலேயே இருக்கும். வெளியேறும்போது வாடகைக்கு வீடு வழங்குவோருடன் வீட்டைத் திருப்பி ஒப்படைப்பதில் பிரச்சினைகள் எதுவும் இல்லாதிருந்தால், அந்த முற்பணம் வட்டியுன் திருப்பி வழங்கப்படும்.

வாடகை இல்லத்திற்கு ஒரு சொந்தப் பாதுகாப்புக் காப்புறுதியை செய்து கொள்ளுமாறு பரிந்துரைக்கப்படுகின்றது.

வீட்டு வாடகைக்கு மேலதிகமாக ஒவ்வொரு வீட்டில் வசிப்பவர்களும் -கருவிகளைக் கேட்பதற்கான கட்டணங்களைச் செலுத்த வேண்டும், இதனால் வானொலி- மற்றும் / அல்லது தொலைக்காட்சி

சுவிஸ் **BILLAG Schweiz**
Infoline: 0844 834 834, E-Mail: info@billag.com
www.billag.ch



– நிகழ்ச்சிகளைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது (உ-ம்: தொலைக்காட்சி, வாகன வானொலி அல்லது கைத்தொலைபேசி). வாடகையாளர் மேற்கோள்ள வேண்டிய கடமை, தன்னை சுவிஸ் ஊடகக் கட்டணம் பெறும் நிலையமான BILLAG ல் பதிவுசெய்வதாகும்.

### ஒரு வாடகை வீட்டில் வசிக்கும்போது நான் எதைக் கவனத்திற் கொள்ள வேண்டும்?

அநேகமான வாடகைவீடுகள் அல்லது -இல்லங்களில் கடைப்பிடிக்க வேண்டிய வீட்டு ஒழுங்கு விதி உள்ளது, அதைக் கட்டாயமாகக் கவனத்திற் கொள்ள வேண்டும். உதாரணமாக இரவு அமைதி 22 தொடக்கம் 07மணி வரை மற்றும் மதிய அமைதி 12 தொடக்கம் 13 வரை கடைப்பிடிக்க வேண்டும். அதேவேளை ஞாயிறு- மற்றும் விடுமுறை தினங்களில் சத்தமிடுவது தவிர்க்கப்பட வேண்டும்.

யாராவது விழாக் கொண்டாட விரும்பினால், அதை தனது அயலாருக்குத் தெரிவிப்பது சிறந்ததாகும்!

பொதுவாகப் பாவிக்கப்படும் இடங்கள் அதாவது சலவை அறை, வீட்டுப் படிகள், பொருட்கள் வைக்கும் இடங்கள் அல்லது பாரம்தூக்கி போன்றவை தமது விருப்பத்துக்கு ஏற்றவாறு வைத்திராமல், அதைத் துப்பரவாக வைத்திருக்க வேண்டும். சலவை அறையைப் பொதுவாகப் பாவிக்கும்போது அநேகமாக பாவிக்கும் பட்டியல் ஒன்று இருக்கும்.

அநேகமான வீடுகளில் பொது அறைகளில் புகைத்தல் தடைசெய்யப்பட்டிருக்கும்!

வாடகைக்கு வழங்குபவரோடு பிரச்சினைகள் ஏற்பட்டால் உங்களுக்கு வாடகைச் சங்கம் அல்லது சமரசம் செய்து வைக்கும் திணைக்களம் உதவி செய்ய உள்ளது.

›››

வாடகையாளர் சங்கம்:
**Mieterinnen und Mieterverband Luzern**
Hertensteinstrasse 40, 6004 Luzern
Telefon: 041 220 10 22 (9 bis 12 Uhr)
mvlu@bluewin.ch / www.mieterverband.ch

மாநில ரீதியாக சிவில் விடயத்தில் சமரசம் செய்துவைக்கும் திணைக்களம்
**Kantonale Schlichtungsbehörde in Zivilsachen**
Bahnhofstrasse 43, 6460 Altdorf, Telefon: 041 875 22 90
E-Mail: schlichtungsbehoerde@ur.ch
www.ur.ch > Behörden > richterliche Behörden

**உங்களுக்குத் தெரியுமா, சுவிஸ் மக்களில் ஏறத்தாழ 60% மானோர் வாடகை வீட்டில் வசிக்கின்றார்கள் என்பது?**

## வசித்தல்

### நான் எவ்வாறு எனது குப்பைகளை அகற்றுவேன்?

சுவிசில் சுற்றச்சூழலைத் திறமையாக வைத்திருப்பது முக்கிய விடயமாகக் கணிக்கப்படுகின்றது. இதை குப்பைகள் மீள் பயன்பாட்டுக்கு மாற்றுவது எடுத்துக் காட்டுகின்றது. குப்பைகள் பிரிக்கப்படுகின்றன மற்றும் மிகுதியாக உள்ள வீட்டுக் குப்பைகள் கட்டணம் செலுத்தும் பைகளில் போடப்பட்டு வாராந்த குப்பை அகற்றுபவர்களால் சேகரிக்கப்படும்.

குப்பை அகற்றும் வழிவகைகள் அதேபோன்று குப்பைகளைப் பிரிக்கும் முறைகளை நீங்கள் வசிக்கும் நகரம் அறியத்தரும்.

| எவை | எங்கு | எப்படி (எப்போது) | கட்டணம் |
|---|---|---|---|
| வீட்டுக் குப்பைகள் | வெளியேற்றுவது (ZAKU-பைகளில் | வீதி ஓரத்தில் வைக்கவும் (ஒவ்வொரு கிழமையும்மூ) | 35/60/110லீ பைகள் வாங்கவும் |
| தோட்டக் குப்பை | வெளியேற்றுவது (பச்சைக் கொள்கலன்) | வீதி ஓரத்தில் வைக்கவும் (ஒவ்வொரு 2 கிழமையும்மூ) | இலவசம் |
| கண்ணாடி | வேறாக சேகரிக்கும் இடங்கள்* | ஒவ்வொரு நிறமும் வேறாக | இலவசம் |
| PET (குடிபானப் போத்தல்கள்) | விற்பனை நிலையங்களில் | போத்தல் காற்றை அழுத்தவும் | இலவசம் |
| பேணிகள் | வேறாக சேகரிக்கும் இடங்கள் | சுத்தப்படுத்தவும் | இலவசம் |
| மின்கலன்கள் | விற்பனைநிலையங்களில் அல். வேறாக சேகரிக்கும் இடங்கள்* | | இலவசம் |
| கடதாசி | வெளியேற்றுவது | கட்டப்பட்டு வீதி ஓரத்தில் (ஏறத்தாழ 2 மாதங்களுக்கு ஒரு தடவை) | இலவசம் |
| கடதாசிமட்டைகள் | வெளியேற்றுவது | கட்டப்பட்டு வீதி ஓரத்தில் (ஏறத்தாழ 2 மாதங்களுக்கு ஒரு தடவைமூ) | இலவசம் |
| துணிவகை | TEXAID-கொள்கலன்* | பைகளில் இடவும் | இலவசம் |
| மின் சாதனங்கள் | வேறாக சேகரிக்கும் இடங்கள்* | திருப்பி எடுக்கும் கடமை | இலவசம் |
| நஞ்சுப் பொருள் | வேறாக சேகரிக்கும் இடங்கள்* | 10 கிலோவரை / கொண்டேகொடுக்கலாம் | இலவசம் |
| எண்ணெய் | வேறாக சேகரிக்கும் இடங்கள்* | வித்தியாசமான எண்ணெய்களை தரம் பிரிக்கவும்! | இலவசம் |
| இறைச்சி எச்சங்கள் | இறைச்சி எச்சங்கள் சேகரிக்கும் இடம் | 200கிலோ வரை, மேலானால் வந்து எடுக்கப்படும | இலவசம் |
| பாதணிகள் | TEXAID-கொள்கலன்* | சோடிகளாக சேர்த்துக் கட்டவும் | இலவசம் |
| மின் விளக்குகள் | விற்பனை நிலையங்களில் | வீட்டுக் குப்பைக்குள் எறிய வேண்டாம்! | இலவசம் |
| பாவித்த தளபாடங்கள் | வேறாக சேகரிக்கும் இடங்கள்* | வீட்டுக் குப்பைக்குள் எறிய வேண்டாம்! | CHF –.50/ kg |
| ஸ்ரிறொபோர் | வேறாக சேகரிக்கும் இடங்கள்* | வீட்டுக் குப்பைக்குள் எறிய வேண்டாம்! | CHF 2.–/kg |
| கட்டிடக் கழிவுகள் | வேறாக சேகரிக்கும் இடங்கள்* | வீட்டுக் குப்பைக்குள் எறிய வேண்டாம்! | CHF –.10/kg |
| தாங்கிகள் | வேறாக சேகரிக்கும் இடங்கள்* | வீட்டுக் குப்பைக்குள் எறிய வேண்டாம்! | CHF 50.–/ஒன்று |
| மரக் கழிவுகள் | வேறாக சேகரிக்கும் இடங்கள்* | எரிக்க வேண்டாம்! | CHF –.25/kg |
| சிறியமோட்டார்சைக்கிள் (Mofa) | வேறாக சேகரிக்கும் இடங்கள்* | பெற்றோல் அல்லது எண்ணெய் இல்லாமல் | CHF 10.–/ஒன்று |
| வாகன ரயர்கள் | வேறாக சேகரிக்கும் இடங்கள்* | 70 செமீ. சுற்றளவு வரை ஊர்கு 7.–/ஒன்று சில்லுடன், சில்லு இல்லாமல் ஊர்கு 4.–/ஒன்று | |

* நகரத்தால் தீர்மானிக்கப்பட்ட சேகரிக்கும் திகதிகள் மற்றும் சேகரிக்கும் இடங்கள் பார்க்க www.zaku.ch

தகவல்கள் «குப்பைகள் மற்றும் மீள் பயன்பாட்டுக்கு மாற்றுவது» டொச்சில்:
www.abfall.ch

தகவல்கள் «குப்பைகளைப் பொருளாதாரப்படுத்துதல் Uri» டொச்சில்:
www.zaku.ch

**உங்களுக்குத் தெரியுமா, குப்பைகளை மீள் பயன்பாட்டுக்கு மாற்றுவதால் சக்தி சேமிக்கப்படுகின்றது, உற்பத்திப்பொருள் மீள வென்றெடுக்கப்படுகின்றது மற்றும் தொழில் வாய்ப்பு ஏற்படுத்தப்படுகின்றதென்பது?**

# தொழில்

## ? எனக்கு ஒரு தொழில் அனுமதி தேவையா?

EU/EFTA-குடிமகன் அல்லது குடிமகளுக்கு ஒரு தொழில் செய்யும் நபராக அனைத்து தொழில்களிலும் மற்றும் தகைமைகளிலும் சுவிஸ் தொழில் சந்தைக்குள் நுழைவதற்கு அனுமதியுண்டு. டிப்ளோமாப் பட்டத்தை அங்கீகரிப்பதற்கான ஒழுங்குகள் உள்ளன.



## ? ஒரு தொழிலாளியாக எனக்கு எவ்வித உரிமை மற்றும் கடமைகள் உள்ளன?

**தொழிலாளர்களுக்கு உரிமை உள்ளது:**

- தீர்மானிக்கப்பட்ட ஊதியம்
- குறைந்தது வருடத்திற்கு 4 கிழமைகள் விடுமுறை
- ஒரு தொழில் சான்றிதழ் பெறுவதற்கு
- தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கு
- ஒரு மாதகால முயற்சித்துப் பார்க்கும் காலம், வேறு விதமாக தீர்மானிக்கபப்பட்டிருக்காவிட்டால்.

**தொழிலாளர்களுக்கு உள்ள கடமைகள்:**

- தொழில் வழங்குனரின் உத்தரவுகளை நிறைவேற்றுவது
- ஒத்துக்கொண்டபடி திறமையாகவும் நேர்மையாகவும் உங்கள் தொழிலைச் செய்வது

## ? ஒரு தொழில் ஒப்பந்தத்தில் என்ன அடங்கியிருக்க வேண்டும்?

ஒரு தொழில் ஒப்பந்தத்தின் உள்ளடக்கம் குறித்த தகவல்களை தொழில் நிபந்தனைகள் என்பதன் கீழ் நீங்கள் காணலாம்.

அடிப்படைரீதியாக ஒரு தொழில் ஒப்பந்தம் வாய்ப்பேச்சு ரீதியாகவும் செல்லபடியாகும். ஆனால் எப்பொழுதும் ஒரு எழுத்து ரீதியான தொழில் ஒப்பந்தத்தை செய்துகொள்ளுமாறு விதந்துரைக்கப்படுகின்றது.

பல்வேறு துறைகளில் அல்லது பெரிய நிறுவனங்களில் தொழில் வழங்குனர்களது மற்றும் தொழில் செய்பவர்களது உரிமைகள் மற்றும் கடமைகள் முழுதொழில் ஒப்பந்தத்தில் (GAV) வரையறை செய்யப்பட்டுள்ளது.

சில தொழில் குழுக்களில் திணைக்களங்கள் சாதாரணதொழில் ஒப்பந்தங்கள் (NAV) என்பதை செய்துகொள்கின்றன. அநேகமாக இப்படியான NAV மாநிலங்களால் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.

உங்கள் துறையில் எப்படியான ஒழுங்குகள் உள்ளது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்!

## ? தொழிலில் இருந்து நிறுத்துவது எவ்வாறு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது?

தொழிலில் இருந்து நிறுத்தும் தவணை பொதுவாக தொழில் ஒப்பந்தத்தால், தொழில் வழங்கியவர்களின் சாதாரண தொழில் ஒப்பந்தத்தால் அல்லது முழு தொழில் ஒப்பந்தத்தால் தீர்மானிக்கப்பட்டிருக்கும். இந்தத் தவணை இரு பகுதியினருக்கும் சமமான காலமாக இருக்கும்.

ஒரு ஒழுங்கு தவறுமாக இருந்தால், கட்டாய சட்டம் (OR) என்பதைப் பாவிக்கும் நிலை ஏற்படும்:

- முயன்று பார்க்கும் காலம்: ஏழு நாட்கள்
- முதலாவது வேலை வருடத்தில்: ஒரு மாதம், மாதத்தின் இறுதியில்
- இரண்டாவது தொடக்கம் ஒன்பதாவது தொழிற்காலம்வரை: இரண்டு மாதம், மாதத்தின் இறுதியில்
- பத்து வருடங்களுக்கு மேல்: மூன்று மாதம், மாதத்தின் இறுதியில்

»»

தொழில் உரிமைகள் குறித்த தகவல்கள், முழுதொழில் நிபந்தனைகள், சாதாரண தொழில் நிபந்தனைகள் மற்றும் தொழில் குறித்த விடயங்கள்:
www.seco.admin.ch > Arbeitsrecht

தொழில் நிபந்தனைகள் பற்றிய தகவல்கள்:
www.ur.ch > «Arbeitsbedingungen»

### என்னை எப்போது வேலையிலிருந்து நீக்க முடியாது?

தொழில் வழங்குனர் ஒரு தொழிலாளியை வேலையிலிருந்து நிறுத்த முடியாது, அது எப்போதென்றால், பின்வரும் ஒரு சந்தர்ப்பம் இருக்குமானால்: உடல்நோய் அல்லது விபத்து, கர்ப்ப காலம் அல்லது குழந்தை பிறப்பு, மத்திய அரசின் வெளிநாட்டு உதவிச்சேவையில் பங்குபெற்றிருக்கும்போது, ஆகக் குறைந்தது 11 நாட்கள் நடைபெறும் கட்டாய இராணுவ சேவை, மக்கள் பாதுகாப்பு அல்லது செஞ்சிலுவைச் சங்கப் பணியின்போது போன்றவை.

### சராசரியான வேலை நேரம் எப்படி இருக்கும்?

சுவிசில் சராசரியாக ஒரு கிழமையில் 42 மணித்தியாலங்கள் வேலை செய்வர். வேலை நேரத்தின் அளவு தொழில் வழங்குனர், செய்யும் வேலை மற்றும் அந்தப் பகுதி என்பதில் தங்கியிருக்கும். வேலை நேரம் தொழில் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

வாராந்த வேலை நேரம் தொழிற்சாலைகளில் வேலைசெய்வோர், அலுவலகங்களில் தொழில்செய்வோர், தொழில்நுட்பவியலாளர் மற்றும் வேறு அலுவலகர்களான தொழிலகத்தில் பணிபுரிவோர் மற்றும் பெரிய நிலையங்களில் விற்பனையாளர்கள் போன்றோருக்கு ஆகக் கூடியது 45 மணித்தியாலமாக வரையறை செய்யப்பட்டுள்ளது. ஏனைய அனைத்து தொழிலாளர்களுக்கும் ஆகக் கூடியது கிழமைக்கு 50 மணித்தியாலங்களாக இருக்கும்.

### எனது ஊதியம் எவற்றை ஒன்று சேர்த்திருக்கும்?

ஊதியம் ஒவ்வொரு முறையும் ஒரு ஊதியக் கணக்காக பதியப்படும். அதில் வரியுடனும் வரி கழித்த பின்பான தொகையும் மற்றும் அனைத்து மேலதிக கொடுப்பனவுகள் மற்றும் கழிவுகள் விளக்கமாகக் குறிப்பிடப்பட்டிருக்கும். மேலதிக ஊதியக் கொடுப்பனவு எனும்போது உதாரணமாக பிள்ளைகளுக்கான கொடுப்பனவு அமையலாம். கழிவு எனும்போது முதியோர்- மற்றும் விட்டுச்செல்வோருக்கான காப்புறுதி (AHV), தொழில் செய்யமுடியாமல் போவதற்கான காப்புறுதி (IV), தொழில் இழப்பிற்கான காப்புறுதி (EO), தொழில், செய்யாத நேரத்துக்கான காப்புறுதி (ALV), தொழில் செய்யாதபோதான விபத்துக் காப்புறுதி (NBU) ஓய்வூதிய நிதி (PK) என்பன அமைந்திருக்கும். ஊதியத்தில் ஒன்றில்

சுவிசில் கட்டாய மருத்துவக் காப்புறுதிப் பணம் ஊதியத்திலிருந்து கழிக்கப்படுவதில்லை. பார்க்க «உடல்நலம்»

### நான் வேலையை இழந்துவிட்டால் என்ன செய்ய வேண்டும்?

பிரதேசத்துக்கான தொழில் வாய்ப்புகளை அறியத்தரும் நடுநிலையத்தில் பதிவு செய்ய வேண்டும் (RAV). அங்கு நீங்கள் உதவியைப் பெற்றுக்கொள்வீர்கள்.

அத்துடன் உடனடியாகவே நீங்கள் ஒரு புதிய வேலையைத் தேட ஆரம்பிக்க வேண்டும். நீங்கள் வேலை தேடுவதற்கு முயற்சிப்பதை உறுதிப்படுத்துவதற்கான பதிவுகளை பத்திரமாக வைத்திருங்கள். தொழில் இழந்தவர்களுக்கான பணத்தைப் பெறுவதற்கு, நீங்கள் உண்மையாகவே ஒரு புதிய வேலையைத் தேடுகின்றீர்கள் மற்றும் அந்தப் பணத்தைப் பெறுவதற்கான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்துள்ளீர்கள் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

மேலதிக தகவல்களைப் RAV Uri ல் பெற்றுக்கொள்ளலாம்.

RAV பிரதேச ரீதியான தொழில் வாய்ப்புகளை அறியத்தரும் நடுநிலையம் Uri
**RAV Regionales Arbeitsvermittlungszentrum Uri**
Klausenstrasse 4, 6460 Altdorf
Telefon: 041 875 24 39, E-Mail: arbeit.migration@ur.ch
www.treffpunkt-arbeit.ch

தொழில் மற்றும் குடிவரவாளர்களுக்கான திணைக்களம்
**Amt für Arbeit und Migration**
Klausenstrasse 4, 6460 Altdorf
Telefon: 041 875 24 18
E-Mail: arbeit.migration@ur.ch
www.ur.ch/arbeit

தொழிற்சங்க ஒன்றியம்
செயலர்
**Gewerkschaftsbund**
Sekretariat, Reto Röthlin
Sonneggstrasse 1, 6463 Bürglen
Telefon: 041 870 13 16
E-Mail: reto.roethlin@bluewin.ch
Schweizer Gewerkschaftsbund: www.sgb.ch

உங்களுக்குத் தெரியுமா, களவாக வேலைசெய்வது தொழிலாளர்களின் பாதுகாப்பைப் பாதிக்கின்றது என்பது?

# வரிகள்



சுவிசில் பொதுப்பணிச் சேவைகளான உள்ளகக் கட்டமைப்பு, போக்குவரத்து, இராணுவம், காவல்துறை, கல்வி, சுகாதாரம், சமூகப் பாதுகாப்பு, காலாச்சாரம் மற்றும் விளையாட்டு என்பன முக்கியமாக தனிப்பட்ட நபர்களின் வருமான- மற்றும் சொத்து வரி, நிறுவனங்களுக்கான வரி மற்றும் பொருட்களுக்கான வரியில் இருந்து செலவுசெய்யப்படுகின்றது.

சுவிசில் வருமான- மற்றும் சொத்து வரிகள் மத்திய அரச (மத்திய வரி) அத்துடன் மாநில மற்றும் நகர வரியாக (மாநில- மற்றும் நகரவரி) எடுக்கப்படுகின்றது.

26 மாநிலங்களில் ஒவ்வொன்றும் தமது சொந்த வரிச்சட்டத்தை கொண்டுள்ளதுடன் வருமானம் மற்றும் சொத்துக்காக வித்தியாசமான அளவுகளில் வரியை அறவிடுகின்றன. ஆகவே சுவிசில் வரி மாநிலத்துக்கு மாநிலம் நகரத்துக்கு நகரம் வித்தியாசமாக அமைந்திருக்கும்.

**சுவிசில் வசிக்கும் வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கான குவெலென் வரி.**

அனைத்து வெளிநாட்டுத் தொழிலாளர்களும், நிரந்த வதிவிட அனுமதி C ஐ கொண்டிருக்காவிடின், குவெலென் வரிக்குள் அடங்குவர். தொழில் வழங்குவோர், கழிக்கப்படும் வரியை நேரடியாக ஊதியத்திலிருந்து (முழுத்தொகையிலிருந்து) கழித்துக்கொள்ள கடமைப்பட்டுள்ளனர். குவெலென் வரிக்குள், மாநில- மற்றும் நகர வரிகள், நேரடியான மத்திய வரிகள் மற்றும் அதேபோன்று இன்னும் ஆலய வரியும் அடங்கும்.

**பாவிக்கப்படும் படிநிலை பின்வருமாறு வித்தியாசப்படுகின்றது:**

- படிநிலை A தனியாக வாழும் வரி செலுத்துபவருக்கு
- படிநிலை B திருமணமான வரி செலுத்துபவருக்கு (தனியாக உழைப்பவர்), இந்தப் படிநிலை பிள்ளைகளின் எண்ணிக்கைப்படி தீர்மானிக்கப்படும் («பிள்ளைகள் இல்லை»C, «1 பிள்ளையுடன;»C «2 பிள்ளையுடன்» இவ்வாறு மேலே செல்லும்)
- படிநிலை C திருமணமான வரி செலுத்துபவர்களுக்கு (இரட்டை உழைப்பாளர்) இப் படிநிலை பிள்ளைகளின் எண்ணிக்கைப்படி தீர்மானிக்கப்படும் («பிள்ளைகள் இல்லை»இ «1 பிள்ளையுடன்;»C «2 பிள்ளையுடன;» இவ்வாறு மேலே செல்லும்)
- படிநிலை D மேலதிக வேலை செய்து உழைப்பது, விசேட படிநிலை

ஊதியம் 120'000 பிராங்கிற்கு மேல் இருந்தால் பின்பு ஒரு ஒழுங்கான கணக்கெடுப்பு இருக்கும் (பார்க்க பின்வரும் விளங்கங்களை)

வதிவிட அனுமதி C வைத்திருக்கும் நபருக்கு ஒழுங்கான வரி சேர்ப்பு அல்லது வரியுடனான ஊதியம் 120´000 பிராங்கிற்க்கு மேலாகினால் இறுதியாகக் கணிக்கப்படும்.

சுவிசை வசிப்பிடமாகக் கொண்ட நபர்கள் அவர்களது ஊதியம் எவ்வளவாக இருப்பினும் நேர்மையுடன் முழு வருமானத்தையும் (வருமான அத்தாட்சி, சொத்து விபரம் போன்றவைகளை) மற்றும் தொழில் செய்வதற்காக ஏற்படும் செலவுகள் போன்றவைகளை வெளிப்படுத்த வேண்டும். வரி வெளிப்படுத்துலை நகர வரித்திணைக்களத்தில் ஒப்படைக்க வேண்டும்.

வரித் திணைக்களம் வரிக்கான தரவுகளை (வருமானம் மற்றும் சொத்து) வருடாந்தம் தீர்மானித்துக் கொள்ளும். தனி நபர்களுக்கான வரி வசிப்பிடத்தால் அறவிடப்படும், இது வருடத்துக்கு ஒருமுறை செலுத்தப்பட வேண்டும்.

வரி விடயம் குறித்த தகவல்கள்:
www.ur.ch/steuern

**உங்களுக்குத் தெரியுமா, சுவிஸ் -சுவிசில் வாழும் வெளிநாட்டு ஆண்கள் மற்றும் பெண்களுக்கு இரண்டு தடவைகள் வரிசெலுத்துவதைத் தவிர்ப்பதற்காக- பல நாடுகளுடன் இரு நாடுகளுக்குமான ஒரு வரி ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளது என்பது?**

# சமூகப் பாதுகாப்பு

**«சமூகப் பாதுகாப்பு» என்ற சொல்லுக்கு என்ன அர்த்தம்?**

சமூகப் பாதுகாப்பு என்பதில் பல்வேறு வித்தியாசமான ஒன்றிணைந்த திட்டங்கள் ஒரு முக்கிய பங்கை வகிக்கின்றன. இவை அனைத்தும் ஒன்றுசேர்ந்து சமூக உதவியாக, அதாவது குடிமக்கள் அவசர தேவைகளில் (நிதித்தேவை) கவனிப்பதற்காக உள்ளன:

«சமூகப் பாதுகாப்பு» பின்வரும் அவசர நிலைகளை உள்ளடக்குகின்றது:

- நோய் மற்றும் விபத்துக்களில் மருத்துவப் பராமரிப்பு
- நோய், விபத்து மற்றும் தாய்மை நிலையின் போதான வருமான இழப்பு
- வயோதிபம், இறப்பு மற்றும் தொழில் செய்ய முடியாத நிலை
- தொழில் இழப்பு
- குடும்பப் பாரங்கள்

**மூன்று தூண்கள் கொள்கை**

மத்திய சட்டவாக்கம் மத்திய அரசை ஒரு போதுமான வயோதிப காலத்துக்கான-, விட்டுச்செல்பவர்களுக்கான- மற்றும் வேலை செய்ய முடியாதவர்களுக்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு கடமைப்படுத்தியுள்ளது. இது மூன்று தூண்களாக வகுக்கப்பட்டுளது:

தூண் 1, வயோதிப- மற்றும் விட்டுச்செல்பவர்களுக்கான காப்புறுதி (AHV), வேலை செய்ய முடியாதவர்களுக்கான காப்புறுதி (IV) மற்றும் மாற்றீட்டு வசதிகளைக் (EL). கொண்டிருக்கும். இது வயோதிப காலத்தில், விட்டுச்செல்வோர் மற்றும் தொழில் செய்ய இயலாதவர்களின் தேவைகளுக்குப் பாதுகாப்பு வழங்கும். வருமானத்தால் (ஓய்வூதியம், ஊதியம்) மற்றும் சொத்துக்களால் செய்யும் பராமரிப்பு போதுமானதாக இல்லாவிட்டால், (EL) பெறுவதற்கு உரிமையுள்ளது


தூண் 2, ஓய்வூதியம் எடுத்த பின்பான அல்லது வேலை செய்ய முடியாத நிலை ஏற்பட்டால் வழங்கப்படும் தொழிலகப் பராமரிப்பு. இதனூடாக வழமையான வாழ்க்கை நிலையை தொடர்வதற்கு வசதி கிட்டும்.

தூண் 3, தனியார் பராமரிப்பு மற்றும் இது அவர்கள் விருப்பத்தைப் பொறுத்தது. சொந்தமாகத் தொழில் செய்வோர் இந்த 3வது துணை 2வது தூணுக்குப் பதிலாக எடுத்துக் கொள்ளலாம்.

»»

சமூகக் காப்புறுதி நிலையம் Uri
**Sozialversicherungsstelle Uri**
Dätwylerstrasse 11, 6460 Altdorf
Telefon: 041 874 50 20
E-Mail: info@svsuri.ch
www.sozialversicherungsstelleuri.ch

தகவல்கள் AHV/IV:
www.ahv-iv.info




மேலதிக விபரங்களை சமூகக் காப்புறுதி நிலையம் Uri அல்லது AHV-நகரக் கிளைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

«««

### விபத்துக் காப்புறுதி

சுவிசில் வேலை செய்யும் தொழிலாளர்கள் அனைவரும் தொழிலாற்ற ஆரம்பித்த 1வது நாள் தொடக்கம் கட்டாயமாக விபத்து மற்றும் தொழில் நோய்களுக்காக காப்புறுதி செய்யப்பட்டுள்ளனர். நீங்கள் வாரத்தில் 8 மணித்தியாலங்களுக்கு மேலாக வேலை செய்தால், நீங்கள் தொழிலகத்துக்கு வெளியில் நடக்கும் விபத்துக்களுக்கும் காப்புறுதி செய்யப்பட்டுள்ளீர்கள்.

தொழில் வழங்குனரால் காப்புறுதி செய்யப்பட வேண்டும்.

தொழில் இழந்த நபர்கள் அடிப்படை ரீதியாக கட்டாயமாகக் காப்புறுதி செய்யப்பட்டுள்ளார்கள்.

சொந்தமாகத் தொழில் செய்பவர்களது குடும்ப உறுப்பினர்கள், குடும்ப நிறுவனத்தில் சேர்ந்து பணியாற்றுவோர், சொந்த விருப்பில் தொழிலக விபத்துக் காப்புறுதியில் காப்புறுதி செய்து கொள்ள வேண்டும்.

காப்புறுதி செய்யப்படாமல் இருப்பவர்கள் ஆகியோர், வீட்டில் இருக்கும் பெண்கள் மற்றும் ஆண்கள், பிள்ளைகள், உயர்கல்வி கற்பவர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுபவர்கள். இவர்கள் கட்டாய மருத்துவக் காப்புறுதியில் விபத்துக்கு எதிராகக் காப்புறுதி செய்துகொள்ள வேண்டும்.

பிரதேச சமூகசேவை:

*Sozialdienst Uri Nord* (Altdorf, Attinghausen, Bauen, Flüelen, Isenthal, Seedorf, Seelisberg, Sisikon)
Telefon: 041 874 12 28

*Sozialdienst Uri Ost* (Bürglen, Schattdorf, Spiringen)
Telefon: 041 874 04 66

*Sozialdienst Urner Oberland*
(Andermatt, Erstfeld, Göschenen, Gurtnellen, Hospental, Realp, Silenen, Wassen)
Telefon: 041 882 01 41

*Sozialdienst Unterschächen*
Telefon: 041 879 11 66

**தொழில் இழப்பு**
பார்க்க தலைப்பு «தொழில்»

**மருத்துவ நிதியம்**
பார்க்க தலைப்பு «சுகாதாரம்»

சமூகசேவைத் திணைக்களம்
**Amt für Soziales**
Klausenstrasse 4, 6460 Altdorf
Telefon: 041 875 21 52
E-Mail: sozialamt@ur.ch, www.ur.ch/gsud

### தாய்மை நிலை

பெண்கள், குழந்தை பிறப்பதற்கு 9 மாத காலம் முன்பாக AHV-வில் காப்புறுதி செய்யப்பட்டிருந்தால், இந்தக் காலத்தில் குறைந்தது 5 மாதங்கள் தொழில் செய்திருந்தால், அத்துடன் பிறப்புக் காலத்தில தொழில் செய்பவராகக் கருதப்படுவாராக இருந்தால், தாய்மைநிலைக் காப்புறுதியிலிருந்து உதவிகளைப் பெறுவார். இந்த உதவி 14 கிழமைகளுக்குக் கிடைக்கும்.

### குடும்பக் கொடுப்பனவு

குடும்பக் கொடுப்பனவு என்பது, பிள்ளைகளைப் பராமரிப்பதற்காக பெற்றோரால் மேற்கொள்ளப்படும் செலவுகளை ஈடு செய்வதற்காக, பகுதிரீதியாக அதைச் சமப்படுத்தப்பட வழங்கப்படுகின்றது. இது பிள்ளைகளது- மற்றும் உயர்கல்விக் கொடுப்பனவு அதேபோன்று ஒருசில மாநிலங்களில் நடைமுறைப்படுத்தப்படும் பிறப்பு- மற்றும் தத்தெடுப்பதற்கான கொடுப்பனவுகளையும் உள்ளடக்கும்.

Uri மாநிலத்தில் பிள்ளைகளுக்கான கொடுப்பனவு மாதமொன்றுக்கு ஒரு பிள்ளைக்கு 200 பிராங்குகள். இது குழந்தை பிறந்த மாதத்திலிருந்து பிள்ளை 16 வயதை முழுமையாக நிறைவு செய்யும் காலம் வரை வழங்கப்படும்.

தொழிற்கல்விக்கான கொடுப்பனவு மாதமொன்றுக்கு ஒரு பிள்ளைக்கு 250 பிராங்குகள். இது பிள்ளை 16வயதை முழுமையாக நிறைவு செய்த பின்பு வரும் மாத இறுதி தொடக்கம் தொழிற்கல்வி நிறைவுறும் வரை வழங்கப்படும், ஆகக் கூடியது 25 வயதுவரை.

குடும்பக் கொடுப்பனவு ஒவ்வொரு வேளையிலும் தொழில் செய்யும் இடங்களைப் பொறுத்து அமைந்திருக்கும். இதற்கான விண்ணப்பம் மற்றும் கொடுப்பனவு தொழில் வழங்குனர்களால் மேற்கொள்ளப்படும்.

**? வாழ்க்கைச் செலவை என்னால் சொந்தமாக செலுத்த முடியாது போனால் என்ன நடக்கும்?**

இப்படியான சந்தர்ப்பத்தில் சமூகஉதவி ஆதரித்துக்கொள்ளும். இது வாழ்வதற்குரிய பாதுகாப்பை வழங்குவதுடன், ஒரு நபர் அல்லது நபர்கள் அடங்கிய ஒரு குழு சமூகத்தில் பங்கெடுக்காமல் ஒதுக்கப்படுவதிலிருந்து பாதுகாக்கின்றது. பொருள் உதவியை விட (நிதிஉதவி மற்றும் மேலதிக பெறுமதியான ஆதரவுகள்) தனிப்பட்ட உதவிகளும் ஒன்றுசேர்ந்து ஒரு தவிர்க்க முடியாத பிரயோசனமுள்ள சமூக உதவியாக அமையும். இப்படியான வேளைகளில் உங்கள் நகரிலுள்ள சமூகசேவைப் பகுதியைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**உங்களுக்குத் தெரியுமா, சமூகக் காப்புறுதியின் இறுக்கமான வலைப்பின்னல் இங்கு வாழும் மற்றும் தொழில் புரியும் மக்களுக்கு மற்றும் அவர்களது உறவினர்களுக்கு ஆபத்துக்களிலிருந்து பாதுகாப்பு வழங்குகின்றது என்பது?**

# சுகாதாரம்

### நான் நோய் மற்றும் விபத்துக்கு எதிராக என்னைக் காப்புறுதி செய்து கொள்ள வேண்டுமா?

சுவிசில் ஒரு மருத்துவக் காப்புறுதியை செய்துகொள்ள வேண்டியது கட்டாயமானதாகும். மருத்துவ நிதியம் உங்களை அடிப்படைக் காப்புறுதியில் சேர்த்துக் கொள்வதற்கு சட்டரீதியாகக் கடமைப்பட்டுள்ளது. மேலதிக காப்புறுதிகள் செய்து கொள்வது உங்கள் விருப்பத்தைப் பொறுத்தது. எவ்வளவு பணம் செலுத்துவது மற்றும் மேலதிக காப்புறுதியால் கிடைக்கும் பராமரிப்பு வசதிகளை நீங்கள் விரும்பியவாறு தேர்வுசெய்ய முடியும். இதன்போது எப்பொழுதும் நீங்கள் சொந்தமாக செலுத்தும் தொகை உங்கள் வருமானத்துக்கு ஏற்றவாறு வரையறுக்கப்பட்டிருக்கும்.

**அடிப்படைக் காப்புறுதியிலிருந்து பின்வரும் பராமரிப்புகளுக்குப் பணம் செலுத்தப்படும்:**

- அடிப்படை ரீதியாக மருத்துவ நிதியம் ஒரு ஆண் அல்லது பெண் வைத்தியரால் மேற்கொள்ளப்படும் அனைத்துச் சிகிச்சைச் செலவுகளையும் பொறுப்பேற்கும். அப்படியில்லாவிடின், சிகிச்சைக்கு முன்பாக உங்களுக்கு அது குறித்துத் தெரிவித்திருக்க வேண்டும்.
- அடிப்படைக் காப்புறுதி, சிகிச்சைச் செலவு மற்றும் Uri மாநில வைத்தியசாலையில் மற்றும் பட்டியலில் இடப்பட்டுள்ள 16 வைத்தியசாலைகளிலும் உள்ள பொதுவான அறைகளில் தங்கியிருக்கும் செலவைப் பொறுப்பேற்கும். தனியார்- அல்லது அரைப்பங்கு- தனியார்- மருத்துவமனைகளில் சிகிச்சை மற்றும் தங்கியிருப்பது உங்கள் செலவாகவே அமையும் அல்லது ஒரு மேலதிக வைத்தியக் காப்புறுதி செய்திருந்தால் அது பொறுப்பேற்கும்.
- அடிப்படைக் காப்புறுதி ஒரு ஆண் அல்லது பெண் வைத்தியரால் எழுதப்படும் அனைத்து மருந்துகளுக்கான செலவுகளையும் பொறுப்பேற்கும்.
- அடிப்படைக் காப்புறுதி பல்வேறு நடவடிக்கைகளுக்கான செலவுகளைப் பொறுப்பேற்கும், உடல்நலப் பாதுகாப்பு (முற்பாதுகாப்பு) வழங்குவது, அதாவது தடுப்பூசிகள், சிறுவருக்கும் முன்பள்ளிப் பிள்ளைகளுக்கும் 8 பரிசோதனைகள், பெண் உறுப்புகள் முற்பரிசோதனை ஒவ்வொரு 3 வருடங்களுக்கும் மற்றும் 50 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு மமோகிறாபி ஒவ்வாரு 2 வருடங்களுக்கும் அல்லது பாதிக்கப்பட்ட பெண்களாக இருப்பின் வருடாந்தம்.

உதவித்தொகை குறித்த தகவல்கள்:
Amt für Gesundheit, Klausenstrasse 4, 6460 Altdorf
Telefon: 041 875 22 42, E-Mail: praemienverbilligung@ur.ch
www.ur.ch/praemienverbilligung

வித்தியாசமான மருத்துவ நிதியங்களின் வசதிகள் மற்றும் கட்டணங்கள் குறித்த தகவல்கள்:
www.bag.admin.ch

«சுகாதார ஆலோசனை வழங்கல்» (சுகாதார ஆலோசனை வழங்கல்) (வித்தியாசமான மொழிகளில் தகவல்கள்) www.migesplus.ch > Publikationen

முற்பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை ஊக்குவித்தல்:
www.gesundheitsfoerderung-uri.ch



### எப்போது எனக்கு ஒரு கட்டணச் சலுகை வழங்கப்படும்?

சுவிசில் வசிக்கும் மற்றும் காப்புறுதி செய்யப்பட்ட நபர்களுக்கு குறைவான வருமானம் இருப்பின், அவர்களது மருத்துவ நிதியக் கட்டணத்திற்கு ஒரு உதவித் தொகையைப் பெற்றுக்கொள்வதற்கு உரிமை உள்ளது. இதில் கவனிக்கப்படுவது வரி செலுத்தும் வருமானமாகும். இந்த உதவித் தொகையின் அளவு மற்றும் நடைமுறை மாநிலத்துக்கு மாநிலம் வித்தியாசப்படும். இவ்வாறான உதவித்தொகைக்கான உரிமை உள்ளதா என்பது அடிப்படை ரீதியாக தன்னிச்சையாகவே கணக்கிடப்படும். குவெலென் வரிசெலுத்தும் நபர்கள் ஒரு விண்ணப்பப் படிவத்தை நிரப்ப வேண்டும். இதை www.ur.ch/praemienverbil-ligung, ல் பெறலாம், நேரடியாக சுகாதார அமைச்சு அல்லது உங்கள் நகரசபை அலுவலத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

### நான் எங்கு மருத்துவச் சிகிச்சை பெறலாம்?

சுவிசில் நீங்கள் தெரிவு செய்த மருத்துவ நிதியத்-திட்டத்தின் பிரகாரம் வைத்தியரை சொந்தமாகத் தெரிவுசெய்யலாம் அல்லது அப்படியில்லாமலும் இருக்கலாம். சிகிச்சை வழங்கும் ஆண் மற்றும் பெண் வைத்தியர்களின் முகவரிகளை உங்கள் நகர தொலைபேசிப் புத்தகத்தில் அல்லது பின்வரும் இணையத்தளத்தில் காணலாம் www.ur.ch, குறும் தலைப்பு «சுகாதாரசேவைகள்».

### எனது பல்வைத்தியர் செலவும் காப்புறுதி செய்யப்பட்டுள்ளதா?

இல்லை, பல்வைத்தியர் செலவு அடிப்படைக் காப்புறுதியில் அடங்கவில்லை. ஆனால் நீங்கள் இதற்காக ஒரு மேலதிக காப்புறுதியை செய்து கொள்ளலாம்.

### எனது பிள்ளையைப் பாடசாலை வைத்தியர்- மற்றும் பாடசாலை பல்வைத்தியர் பரிசோதித்தால் அச் செலவை நான் பொறுப்பேற்க வேண்டுமா?


மக்கள் பாடசாலை ஒழுங்கான இடைவெளிகளில் பாடசாலை வைத்தியர் மற்றும் பாடசாலை பல்வைத்திய பரிசோதனை-களை கட்டாய பாடாசாலைக் காலத்தில் ஒழுங்கு செய்யும். இது இலவசமானது!

### நான் தண்ணீரை வீட்டின் தண்ணீர்க் குழாயிலிருந்து குடிக்கலாமா?

ஆம், சுவிசில் தண்ணீர் சிறந்த தரமாக உள்ளதுடன் இலவசமானது. தண்ணீர் மிகவும் சிறந்த மற்றும் -சுகாதாரமாகத் தாகம் தீர்ப்பது.

**தனது சுகாதாரத்தில் மற்றும் குடும்பத்தில் அக்கறை எடுத்துக்கொள்வது, அனைத்திலும் சிறந்த பராமரிப்பு மற்றும் அது வாழ்க்கைத் தரத்தை மேலுயர்த்தும்!**

# பாடசாலை மற்றும் உயர்கல்வி




| | | | |
|---|---|---|---|
| Eidg. Berufs- und höhere Fachprüfung | மத்திய அரச தொழில்- மற்றும் உயர்பட்டப் பரீட்சை | lehrbegleitend | பகுதி நேரம் |
| Höhere Fachschulen | உயர் தொழில்நுட்பக் கல்லூரி | BVS | தொழிலை ஆயத்தப்படுத்தும் பாடசாலை வருடம் BVS |
| Fach-Hochschulen | துறைசார் தொழில்நுட்பக் கல்லூரி | Matura | பல்கலைக்கழகம் செல்வதற்கான சான்றிதழ் |
| Universität | பல்கலைக்கழகங்கள் | Obergymnasium | உயர்தர கிம்நாசியம் |
| ETH | மத்திய அரச தொழில்நுட்பக் கல்லூரி சூரிச் ETH | Untergymnasium | கீழ்த்தர கிம்நாசியம் |
| | | Volksschule | கட்டாய பாடசாலை |
| Berufsfachschule | பலதொழில்துறைப் பாடசாலை | Oberstufe | உயர்தரம் |
| Mittelstufe | மத்தியதர பாடசாலை | Werkschule (Werk) | தொழில்பாடசாலை (Werk) |
| Berufsmatura | தொழில்துறை மற்றூறா | Realschule (Real) | றியால் பாடசாலை (Real) |
| (Vollzeit) | (முழுநேரம்) | Sekundarschule (Sek.) | நடுத்தரப் பாடசாலை (Sek.) |
| Lehre | தொழில் பயிலுதல் | Primarschule | ஆரம்பப் பாடசாலை |
| KV mit Berufsmatura | வர்த்தக தொழில்துறைக் கல்லூரி மற்றூறாவுடன் | integrierte Oberstufe | ஒத்துழைத்து உதவும் உயர்தரம் |
| | | kooperative Oberstufe | சேர்ந்து செயற்படும் உயர்தரம் |

### ? Uri மாநிலத்தின் பாடசாலை ஒழுங்குமுறை எவ்வாறு அமைந்துள்ளது?

சுவிசில் மாநிலம் மக்கள் பாடசாலை (Volksschule) யையும் மற்றும் மத்திய அரசு உயர்தரம் II (Sekundarstufe II) மற்றும் உயர்கல்வி, பல்கலைகழக விடயங்களைக் கவனித்துக்கொள்கின்றன.

தாய்மொழியில் மற்றும் கலாச்சாரங்களில் பாடங்கள் (HSK):
www.ur.ch > «HSK»

### ? சுவிசில் பாடசாலை செல்லும் கடமை எவ்வாறு உள்ளது?

சுவிசில் மக்கள் பாடசாலைக்கு (1முதல் 9ம் வகுப்பு வரை) செல்லுதல் கட்டாயமானதாகும். Uri மாநிலத்தில் பாலர் பாடசாலைக்கு செல்வது சொந்த விருப்பத்தின்பேரிலாகும், ஆனால் அதிகளவில் பரிந்துரைக்கப்படுகின்றது.

பொதுவான பாடசாலைகள் சமய ரீதியாக நடுநிலை வகிக்கும். சமய ரீதியான நம்பிக்கையில் பிள்ளைகளை வளர்ப்பது பெற்றோரின் விடயமாகும்.

»»»

# பாடசாலை மற்றும் உயர்கல்வி

குடிவரவுப் பின்னணியில் உள்ள பிள்ளைகள் தமது தாய்மொழி மற்றும் கலாச்சாரத்தில் உள்ள பாடங்களுக்கு (HSK-பாடங்கள்) செல்லலாம். அதிக வேளைகளில் இவ்வாறான பாடங்கள் Uri மாநிலத்திற்கு வெளியே நடப்பதுடன் வழமையான பாடநேரங்களுக்கு அப்பால் இடம்பெறும். உங்கள் நகரிலுள்ள பாடசாலையில் இதன் முகவரி குறித்துக் கேட்டறிந்து கொள்ளங்கள்.

**? எனது பிள்ளை பாடசாலையில் டொச் கற்கும்போது எவ்விதமான உதவிகளைப் பெற்றுக்கொள்ளும்?**

புதிதாகக் குடிவந்த பிள்ளைகள் வழமையாக ஒன்று முதல் இரண்டு வருடங்கள் தீவிர- அல்லது உதவிப் பாடப்பயிற்சியைப் பெற்றுக்கொள்வார்கள். இந்தப் பயிற்சி வழமையான பாட நேரங்களில் நடைபெறும்.

**? எனது பிள்ளைக்கு பாடசாலையில் சிக்கல்கள் மற்றும் பிரச்சினைகள் இருக்குமானால் நான் எங்கு அறிவிக்க வேண்டும்?**

முதல் கதைத்துக்கொள்ள வேண்டிய நபர் வகுப்பு ஆசிரியராகும். தேவைப்படுமானால் ஆசிரியர் சம்பந்தப்பட்ட இடத்திற்கு அனுப்பி வைப்பார்.

**? உங்கள் பிள்ளைகளின் கட்டாய பாட-சாலைக் காலத்தில் பெற்றோரிடமிருந்து என்ன எதிர்பார்க்கப்படுகின்றது?**

பெற்றோர்கள் கடமைப்பட்டுள்ளனர்:

- உங்கள் பிள்ளைகள் பாடசாலைக்கு வரும் கடமையை செய்கிறார்களா என்பதைக் கண்காணிப்பது
- பாடசாலையுடன் சேர்ந்து இயங்குதல்
- உங்கள் பிள்ளைகளின் மதிப்பெண் சான்றிதழ்களை பார்வையிடுவது மற்றும் கையொப்பமிடுவது
- மதிப்பீட்டுக் கலந்துரையாடலுக்கு ஆசிரியர்கள் அழைக்கும்போது பங்கேற்பது
- விடுமுறைக்கான அனுமதியை உரிய காலத்துடன் பெற்றுக்கொள்ளல், தாமாக வராது இருப்பதை முன்பாகவே அறிவித்தல் மற்றும் வராமைக்கான காரணத்தைத் தெரிவித்தல்.

**? பெற்றோராக உங்களுக்கு என்ன உரிமைகள் உள்ளன?**

பெற்றோருக்கு உள்ள உரிமைகள்:

- பெற்றோரின் உரிமைகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான அனைத்து தகவல்களையும் பெற்றுக்கொள்ளல்
- பிள்ளையின் படிப்பின் முன்னேற்றம் மற்றும் அவர்க-ளின் செயற்பாடுகள்- மற்றும் சமூக நடைமுறைகள் குறித்து அறிவிக்கப்படல்
- பிள்ளையின் முன்னேற்றம் குறித்த மதிப்பீடுகளை பார்வையிடுதல்
- ஆசிரியர்களுடன் தனிப்பட்ட கலந்துரையாடலை மேற்கொள்ளல்
- ஆசிரியர்களுடன் கதைத்த பின்பு பாடநேரத்தில் உடனிருந்து பார்வையிடல்
- பாடசாலையால் பரீட்சிக்கப்படும் அல்லது புதுப்பிக்கப்படுபனவற்றை உரிய காலத்துடன் அறிவிக்கப்படல்
- பாடசாலை நடைபெறாத நாட்கள் உரிய காலத்துடன் அறிவிக்கப்படல்
- கட்டாய பாடசாலைக் காலத்தில் வழமையாக ஒருவருடத்திற்கு ஒருமுறை பெற்றோர் ஒன்றுகூடலுக்கு அழைக்கப்படல்

**? கட்டாய பாடசாலைக்குப் பின்பு என்ன நடக்கும்?**

இளையோர்கள் கட்டாய பாடசாலைக் காலத்தின் பின்பு ஒரு தொழிற்கல்வியை அல்லது மேலே கற்கக்கூடிய பாடசாலைக்கு (கிம்நாசியம் மற்றும் பின்பு பல்கலைக்கழகத்திற்கு) செல்வார்கள்.

சுவிசில் தொழிற்கல்வி இருபக்கமானதாகும், அதாவது இளையோர் தொழிற்சாலையில் வேலை செய்துகொண்டு அதனுடன் கற்கைநெறியை மற்றும் பொதுவான கல்வியைப் பயில்வதற்கு தொழில் கற்கும் பாடசாலைக்கும் செல்வார்கள்.

இரு வழிகளும் சமமானதாகக் கருதப்பட வேண்டும்..

இணைப்புப்பால வசதிகள்

எவருக்காவது கட்டாய பாடசாலைக் காலத்தின் பின்பு நேரடியாக அடிப்படைத் தொழிற்கல்வியையோ அல்லது மேற்படிப்பிற்கான பாடசாலையையோ பெற சந்தர்ப்பம் கிடைக்காது விட்டால், அவர்கள் ஒரு இடை வருடத்தை தெரிந்து கொள்ளலாம். இதற்கான சந்தர்ப்பமாக ஒரு இணைப்புப்பால வசதிக்கு செல்வதாகும்.

இதற்கான ஆலோசனைகளைப் பெறுவதற்கு தொழில்-, உயர்கல்வி- மற்றும் செல்லும் வழிக்கான ஆலோசனை நிலையத்துடன் நீங்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

**B-V-S பாடசாலை ரீதியான இணைப்புப்பால வசதி**

B-V-S என்பது 10. வது பாடசாலை வருடமாக சொந்த விருப்பில் ஒரு தொழிற்கல்வியை அல்லது மேற்படிப்பிற்கான பாடசாலைக்குச் செல்வதற்கு வெற்றிகரமாக ஆயத்தப்படுத்தும் வசதியாகும்.

**உங்களுக்குத் தெரியுமா, பிள்ளையின் பாடசாலை வாழ்வில் பெற்றோரின் ஆர்வம் மற்றும் பங்களிப்பு அவர்களின் சித்தியடைதலுக்கு ஒரு முக்கிய காரணியாக அமைகிறது, இதுவே அவர்களுக்கு தொழில் வாழ்வில் ஒரு நல்ல ஆரம்பமாக அமையச் செய்கின்றது என்பது?**

**Informationen Schulgemeinden:**
www.bildungsportal-uri.ch > Gemeindeschulen

**K-B-A ஒன்றிணைந்த இணைப்புப்பால வசதி**

K-B-A என்பது வெற்றிகரமாக ஒரு தொழிற்கல்வியை கற்பதற்கு அல்லது தொழிலுக்கான ஒரு அடிப்படைக் கல்வியை கற்கும் குறிக்கோளுக்காக ஆயத்தப்படுத்தும் வருடம்.

**I-B-A ஒன்றிணைந்த இணைப்புப்பால வசதி**

I-B-A இதில் பிறமொழி பேசும் இறையோர் சேர்த்துக்கொள்ளப்படுவர், இவர்கள் தமது வயதின் காரணமாக (15 வயதிற்கு மேற்பட்டவர்கள்) மக்கள் பாடசாலையில் பயில மறுக்கப்பட்டவர்கள், ஆனால் இதுவரை ஒரு அடிப்படைத் தொழிற்கல்விக்குப் போக முடியாதவர்கள், ஏனென்றால் இவர்களது மொழி-அறிவு போதாமையாகும்.

### ? ஒரு வயதுவந்த நபராக நான் மேற்படிப்பைக் கற்கலாமா?

வயதுவந்த நபர்களின் உயர்கல்வி, «வாழ்க்கை முழுவதும் கற்றல்», என்பது சமுதாய மற்றும் பொருளாதாரப் பரவலில் அதிகளவு நற்பெயரைச் சம்பாதித்துள்ளது. மேற்படிப்புப் பாடங்கள் தனிப்பட்ட ரீதியில் மற்றும் பொதுக் கல்வி நிலையங்களினால் கற்பிக்கப்படுகின்றது. இது வயதுவந்தவர்களுக்கு, தொழில் மற்றும் தொழிலுக்கு அப்பாற்பட்ட அறிவை மேலும் வளர்த்துக்கொள்ள சந்தப்பம் கொடுக்கின்றது.

### ? ஒரு வயதுவந்த நபராக நான் மேலும் ஒரு தொழில் கல்வியைப் பெறலாமா?

ஒவ்வொரு தொழிலிலும் குறிப்பிட்ட பல வருடப் பயிற்சியின்பின், அத் தொழிலைக் கற்றுத் தேறுவதற்கு பின்நாளில் ஒரு சந்தர்ப்பம் உண்டு. இதற்கு நீங்கள் கட்டாயம் அடிப்படைக் கற்கைநெறியின் தொழில் நடைமுறை மற்றும் பொதுவான கற்கைநெறி அறிவைப் பெற்றுத் (அப்படியில்லாவிட்டால் முதலாவது அடிப்படைக் கல்வியின்போது கற்கப்பட வேண்டும்) தகுதியாக இருக்க வேண்டும். இதுபற்றிய மேலதிக சந்தர்ப்பங்கள் குறித்து அறிந்துகொள்ள தொழில்-, உயர்கல்வி- மற்றும் செல்லும் வழிக்கான ஆலோசனை நிலையத்துடன் நீங்கள் தொடர்பு கொள்ளுங்கள் அல்லது www.berufsberatung.ch ல் தகவல் பெறுங்கள்.

### ? எனது டிப்ளோமா பட்டம் சுவிசில் அங்கீகரிக்கப்படுமா?

சுவிஸ் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஒன்றுக்கொன்று அனைத்து தொழில்களினதும் உயர்கல்விச் சான்றிதழ்களை, ஒவ்வொரு உறுப்பு நாடுகள் ரீதியாகவும் ஏற்றுக்கொள்கின்றன. தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்பத்துக்கான மத்திய அமைச்சின் (BBT) தேசிய தொடர்பு நிலையம் எவ்வாறு இதைச் செய்வது மற்றும் இதற்குப்பொறுப்பான அனுமதிக்கும் திணைக்களம் என்பவை குறித்து அறியத்தரும்.

வெளிநாட்டு உயர்கல்விச் சான்றிதழ் முழு சுவிசிலும் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. ஒரு பல்கலைக்கழகக் கல்விக்கான அனுமதிக்கு நேரடியாக உயர் கல்லூரிகளைத் தொடர்புகொள்ளுங்கள்.

கல்விக்கான அரச செயலர், ஆய்வு மற்றும் திட்டமிடல் SBFI டிப்ளோமாவை அங்கீகரிக்கும் தொடர்பு நிலையம்
**Staatssekretariat für Bildung, Forschung und Innovation SBFI: Kontaktstelle Diplomanerkennung**
Effingerstrasse 27, 3003 Bern, Telefon: 031 322 28 26
E-Mail: kontaktstelle@sbfi.admin.ch
www.sbfi.admin.ch/diploma

Swissuniversities – சுவிஸ் உயர் கல்லூரி, துறைசார் கல்லூரி, பல்கலைக்கழக அதிபர்களின் மாநாடு மற்றும் ETHs அங்கீகரிப்பது குறித்த கேள்விகள் பற்றிய தகவல் நிலையம்
**Swissuniversities – Rektorenkonferenz der Schweizer Hochschulen, Fachhochschulen, Universitäten und ETHs Informationsstelle für Anerkennungsfragen: Swiss ENIC**
Effingerstrasse 15, 3000 Bern, Telefon: 031 335 07 32
E-Mail: communications@swissuniversities.ch
www.swissuniversities.ch > Services > ENIC

தொழில்தெரிவு, பல்கலைக்கழகக் கல்வி மற்றும் செல்லும் வழி குறித்த தகவல்கள்:
www.berufsberatung.ch

வெளிநாட்டு டிப்ளோமா பட்டம் அங்கீகரிப்பது குறித்த தகவல்கள்:
www.migraweb.ch
> Schule und Bildung > ausländische Diplome

மேற்படிப்பைத் தொடருவதற்கான வசதிகள் குறித்த தகவல்கள்:
www.bwzuri.ch oder unter
www.weiterbildung-uri.ch

தொழில்-, பல்கலைக்கழகக் கல்வி- மற்றும் செல்லும்வழிக்கான ஆலோசனை
**Berufs-, Studien- und Laufbahnberatung**
Klausenstrasse 4, 6460 Altdorf
Telefon: 041 875 20 62, E-Mail: biz@ur.ch
www.ur.ch/berufsberatung

**உங்களுக்குத் தெரியுமா, Uri யில் பாடசாலையிலிருந்து வெளிவருகின்ற ஆண்கள் மற்றும் பெண்களுள் 80% மாணோர் ஒரு தொழிற்கல்வியைக் கற்கின்றனர் மற்றும் 20% மாணோர் உயர்கல்வியைக் கற்கும் பாடசாலை செல்கின்றனர் என்பது?**

# பிள்ளை

## எவ்வாறு வதிவிட உரிமை வழங்கப்படுகின்றது?

சுவிசில் பிறக்கும் ஆண் மற்றும் பெண் குடிவரவாள-ர்களின் பிள்ளைகளுக்கு வதிவிட- அல்லது நிரந்தர உரிமை பெற்றோருக்கு என்ன உள்ளதோ அதுவே வழங்கப்படும்.

இந்த உரிமை மூன்றாம் நாடுகளிலிருந்து வரும் பெற்றோரின் பிள்ளைகளுக்கு செல்லுபடியாகும், அதாவது அவர்கள் திருமணமாகாமல் இருப்பதுடன் பெற்றோருடன் ஒன்றுசேர்ந்து வாழவேண்டும், ஆகக் கூடியது 18வது பிறந்தநாள் வரை. இதன்பின் அவர்கள் தமக்கு தனிப்பட்ட வதிவிட உரிமை பெற்றுக்கொள்ள வேண்டும். EU/EFTA-நாடுகளிலிருந்து வந்துள்ள பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு இது, அவர்கள் 21 வயதாகும் வரை செல்லுபடியாகும்.

விவாகரத்தின் பின்னர் பராமரிக்க உரிமை பெற்ற பெற்றோரின் பகுதிக்கு உரிமையுள்ளது, பிள்ளையின் வதிவிடம் குறித்து முடிவெடுப்பதற்கு, அதாவது பராமரிக்க உரிமை பெற்ற வெளிநாட்டு பெற்றோர் பகுதி உதாரணமாக அவரது தாய்நாடு திரும்பினால் பிள்ளையையும் கூட்டிச்செல்லலாம். பராமரிக்க உரிமையில்லாத பெற்றோர் பகுதி பிள்ளையைத் தரிசிக்கும் உரிமை வழங்கப்பட வேண்டும்.

## எவை பெற்றோருக்கு முக்கியமாகத் தெரிந்திருக்க வேண்டும்?

பெற்றோர் தமது பிள்ளையின் பராமரிப்பு மற்றும் வளர்ப்பிற்கு பொறுப்பு வகிப்பதுடன் அதற்குத் தேவையான முடிவுகளை எடுப்பர். இதன்போது பிள்ளையின் நலனே முக்கியமாகக் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

பெற்றோர் தமது பிள்ளையை தமது நடைமுறைக்கு ஏற்றவாறு வளர்ப்பதுடன் அவர்களது உடல், உள மற்றும் உணர்வு ரீதியான விடயங்களை ஊக்குவிப்பது மற்றும் பாதுகாக்க வேண்டும்.

நீங்கள் பிள்ளைக்கு அவர்களுக்கு ஏற்ற, அவர்களது திறமை மற்றும் விட்டுக்கொடுப்புக்கு ஏற்ற பொதுவான தொழிற்கல்வியை அடைய உதவுதல். இந்த நோக்கிற்காக நீங்கள் பாடசாலையுடன் சேர்ந்து இயங்க வேண்டும்.

பிள்ளையின் நலன் பாதிக்கப்பட்டு மற்றும் பெற்றோர் அதற்கேற்ற உதவிகளை வழங்காதுவிடின் அல்லது அவர்கள் தெரியாததுபோல் இருந்தால், பிள்ளையின் பாதுகாப்புக் கருதி மற்றவர்களுக்காகக் குரல் கொடுக்கும் திணைக்களம் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும (KESB).

பெற்றோர் பிள்ளைகளின் பராமரிப்பை, அவர்களது உயர்கல்வி மற்றும் சிலவேளைகளில் பிள்ளைகள் பாதுகாப்பு நடவடிக்கையாக அவர்களுக்காகக் கதைக்கும்

**உங்களுக்குத் தெரியுமா, முதல் மொழிக்கு கொடுக்கும் ஊக்கமே, இப் பிரதேச மொழியைக் கற்பதற்கு ஒரு முக்கிய அடித்தளமாக அமையுமென்பது?**



உரிமை உள்ளவரை (18 வயதுவரை) அல்லது பிள்ளை தனது முதலாவது தொழிற்கல்வியை முடிக்கும்வரை பொறுப்பேற்க வேண்டும்.

### பிள்ளைகள் பராமரிப்புக்கான வசதிகள்

«stiftung papilio» என்பது Uri யில் குடும்ப வாழ்வு பற்றிய கேள்விகளுக்கான நிலையமாகும். இதன் வசதிகளில் பிள்ளைகள் பராமரிப்பு, மதிய உணவு மற்றும் சமூகத் துறைசார் ஆலோசனைகளை உள்ளடக்குகின்றது.

### பாடசாலைக்கு முன்பான வயதில் பிள்ளைகளுக்கான விளையாட்டுக் குழு

விளையாட்டுக் குழுக்கள் மூன்று வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு விளையாட்டின்போது பல முக்கிய அனுபவங்களை வழங்குவதுடன் ஒரு திறமையான குழு ஒரு நல்ல நபராவதற்கு –மற்றும் கற்றுக்கொள்வதற்கும் ஒரு அடிப்படையாக அமைகின்றது. விளையாட்டுக் குழுக்கள் பற்றிய முகவரிகளைத் தெரிந்து கொள்வதற்கு உங்கள் நகரசபையிடம் கேட்டுக்கொள்ளுங்கள்.

விளையாட்டுக் குழுக்கள
www.ur.ch > «Spielgruppen»

ஆலோசனை நிலையங்கள்
www.ur.ch > «soziale Institutionen»

**stiftung papilio**
Gotthardstrasse 14, 6460 Altdorf
Telefon: 041 874 13 00
E-Mail: info@stiftung-papilio.ch
www.stiftung-papilio.ch

தாய்மார்- மற்றும் தந்தைமாருக்கான ஆலோசனை Uri
**Mütter- und Väter-Beratung Uri**
Rüttistrasse 71, 6467 Schattdorf , Telefon: 041 871 04 04
E-Mail: info@spitexuri.ch, www.spitexuri.ch

# திருமணம், பிறப்பு மற்றும் இறப்பு

## திருமணத்திற்கு முன்பாக எதைக் கவனத்திற் கொள்ள வேண்டும்?

திருமணத் தம்பதிகள் வசிக்கும் நகரிலுள்ள இதற்குப் பொறுப்பான சிவில் திருமணப் பதிவு அலுவலகம் தேவைப்படும் சான்றிதழ்கள் குறித்து விபரங்களை வழங்குவதுடன் சிவில் திருமணத்தை ஆயத்தப்படுத்தும். Uri மாநிலத்தை வசிப்பிடமாகக் கொண்ட நபர்களுக்கு Uri சிவில் திருமணப் பதிவு அலுவலகம் பொறுப்பு வகிக்கும்.

ஒரு மேலதிக சமய ரீதியான வைபவங்களுக்கு அவர்களது சொந்தச் சமயக் குழுக்களோடு பேசி ஒழுங்குபடுத்த வேண்டும்.

**திருமணம் செய்வதற்கான நிபந்தனைகள்.**

- இவர்கள் 18 வயதாகவும் தீர்ப்பு வழங்கக்கூடியவர்களாகவும் இருக்க வேண்டும்.
- இவர்களுக்கு ஏற்கனவே திருமணமாகியிருக்கக்கூடாது
- இவர்கள் சுவிசில் சட்ட ரீதியாக வசிக்க வேண்டும்.
- சட்டப்படி ஒன்றுவிட்ட சகோதரர்களை அல்லது பெற்றோரின் மற்றத்தாரத்துப்பிள்ளையை அல்லது பெற்றோரை (சொந்தப் பெற்றோர் அல்லது வளர்ப்புப் பெற்றோர்) அல்லது பேரர் பேத்திகள் அதாவது ஒரு நபருக்கு இடையாக மற்றும் தம்பதிகளில் ஒருவரின் பிள்ளையை (தாம்பத்தியம் செல்லுபடியாகாது என அறிவிக்கப்பட்டிருப்பினும் அல்லது அது ரத்துச் செய்யப்பட்டிருப்பினும்) திருமணம் செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.
- மேலதிக சான்றிதழ்கள் சிவில் திருமணப் பதிவு அலுவலகத்தின் வேண்டுகோளின்படி

வற்புறுத்தி திருமணம் செய்விப்பதற்கு சுவிசில் தடையுள்ளது.



## ஒரு பிறப்பின்போது எதைக் கவனத்திற் கொள்ள வேண்டும்?

ஒரு பிள்ளை பிறந்த பின்பு பிறந்த இடத்திலுள்ள சிவில் பதிவு நிலையத்தில் பதிவுசெய்ய வேண்டும். வீட்டில் பிள்ளை பிறக்குமாக இருந்தால், இதற்கான பிறப்புப் பதிவு, மருத்துவிச்சியால் நிரப்பப்பட்டதை, எடுத்து வரவும். Uri மாநில வைத்தியசாலையில் பிறக்குமாக இருந்தால் இப் பதிவு நேரடியாக வைத்தியசாலையால் மேற்கொள்ளப்படும்.

ஒரு மேலதிக சமய ரீதியான வைபவங்களுக்கு அவர்களது சொந்தச் சமயக் குழுக்களோடு பேசி ஒழுங்குபடுத்த வேண்டும்:

›››

சிவில் பதிவுத் திணைக்களம் Uri
**Zivilstandsamt Uri**
Marktgasse 6, 6460 Altdorf
Telefon: 041 875 22 80
E-Mail: zivilstandsamt@ur.ch

திருமணம் செய்வது பற்றிய தகவல்கள்:
www.ur.ch > «Zivilstandsamt»

பிறப்புப் பற்றிய தகவல்கள்:
www.ur.ch > «Zivilstandsamt»

# திருமணம், பிறப்பு மற்றும் இறப்பு

### இறப்பு இடம்பெற்றால் எதைக் கவனத்திற் கொள்ள வேண்டும்?

ஒரு இறப்பின்போது இறப்பு அத்தாட்சிப் பத்திரம் ஒரு வைத்தியரால் நிரப்பப்பட வேண்டும். அதன்பின் அந்த இறப்பு நிகழ்வை காலம் தாழ்த்தாது அதற்குப் பொறுப்பான நகரமான, Altdorf ல் சிவில் பதிவுத் திணைக்களம் Uri யில் பதிவு செய்ய வேண்டும். இறப்பு ஒரு வைத்தியசாலையில், முதியோர்- அல்லது பராமரிப்பு நிலையத்தில் இடம்பெற்றால் வைத்தியசாலை- அல்லது இல்ல நிர்வாகம் இறப்புப் பதிவை மேற்கொள்ள வேண்டியது கடமையாகும். அப்படியில்லாவிடின் இறப்பை உறவினர்கள் பதிவுசெய்யக் கடமைப்பட்டுள்ளனர்.

துயிலும் இல்ல வழிபாட்டு நிலையத்திற்கு அல்லது மயானத்துக்கு எடுத்துச் செல்வதற்கு இறுதிச் சடங்குகளைக் கவனிக்கும் நிறுவனத்துக்குப் பொறுப்புக் கொடுக்க வேண்டும். விரும்பினால் சடலத்தை உள்நாட்டின் வேறு பகுதிக்கோ அல்லது வெளிநாட்டிற்கோ எடுத்துச் செல்ல இவர்கள் பொறுப்பேற்பார்கள். இறுதிச் சடங்குகளிற்கான செலவை உறவினர்களே பொறுப்பேற்க வேண்டும்.

இறப்பு நேர்ந்தால் அதை இறப்பு இடம்பெற்ற நகரத்தில் பதிவதற்கு நீங்கள் பின்வரும் சான்றிதழ்களை எடுத்துவர வேண்டும்:

- வைத்தியரின் இறப்புச் சான்றிதழ்
- இருக்குமாயின் குடும்பப் புத்தகம்
- கடவுச்சீட்டு அல்லது அடையாள அட்டை மற்றும் வெளிநாட்டவர் அடையாள அட்டை
- சிவில் பதிவுத் திணைக்களம் Uri, மேலதிகமாக எந்த சான்றிதழ்கள் இன்னும் தேவை என்பதை அறியத்தரும் (பிறப்பு சான்றிதழ், திருமணச் சான்றிதழ் போன்றவை)

சமய ரீதியான வைபவங்களுக்கு சொந்தச் சமயக் குழுக்களோடு பேசி ஒழுங்குபடுத்த வேண்டும்:

கிறிஸ்தவர்கள் அல்லாத வேறு சமயக் குழுக்களுக்கு Uri யில் விசேட துயிலும் இல்லம் இல்லை.

இறப்பு சம்பந்தமான தகவல்களுக்கு:
www.ur.ch > «Zivilstandsamt»

### சமயம்

Uri மாநிலத்தின் சட்டவாக்கம் சமய- மற்றும் வெளிப்படுத்தும் சுதந்திரத்தை உறுதிப்படுத்துகின்றது. ஒவ்வொரு நபரும், அவரின் சமய நம்பிக்கை மற்றும் எந்த சமயத்தில் அவர் சேர்ந்திருக்க விரும்புகிறார் என்பதை சொந்தமாகத் தீர்மானித்துக்கொள்ள முடியும். எவரையும் தமது சமயத்தைப் பின்பற்றுமாறு வற்புறுத்த முடியாது. மதச் சுதந்திரம் இதன்படி ஒரு தனிப்பட்ட உரிமை, இதன்படி ஒவ்வொரு நபரும் சொந்தமாகத் தாம் விரும்பியபடி அதைப் பின்பற்றலாம். முக்கியமானது என்னவென்றால், சுவிசில் சமயத்துக்கு முன்பாக நாடு உள்ளது. மதச் சுதந்திரம் வழங்கப்பட்டிருக்கும், அது சுவிசினுடைய அல்லது மாநிலத்தினுடைய சட்டங்களை மீறாதிருக்கும் வரையாகும்.

Uri யில் உள்ள சமயக் குழுக்களின் ஒரு பட்டியலை ஒத்துழைத்து முன்னேற்றும் நிலையத்திடம் நீங்கள் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

ஒத்துழைத்து முன்னேற்றும் கேள்விக்களுக்கான நிலையம்
**Ansprechstelle für Integrationsfragen**
Klausenstrasse 4
6460 Altdorf
Telefon: 041 875 20 66
E-Mail: integration@ur.ch
www.ur.ch > «Integration»

உங்களுக்குத் தெரியுமா, Uri மாநிலத்தில் கிறிஸ்தவ- பாரம்பரியக் கலாச்சாரம் வழக்கமாக மற்றும் நாளாந்த வாழ்வு ரீதியாக வேரூன்றியுள்ளதென?

# நாளாந்த வாழ்வு மற்றும் ஓய்வுநேரம்

**இங்கு எனக்கு எவ்விதமான ஓய்வுநேர வசதிகள் உள்ளன?**

இலவசப் பத்திரிகை «Uristier» அதேபோன்று பிரதேசப் பத்திரிகைகளிலும் நிகழ்வுகள் குறித்த அறிவித்தல்களைக் காணலாம். இணையத்தளத்தில் நீங்கள் www.uri.ch என்ற முகவரியில் கலாச்சார, விளையாட்டு மற்றும் வேறு நிகழ்சிகள் பற்றிய ஒன்றுசேர்ந்த தகவல்கள் மற்றும் வசதிகளை கண்டுகொள்ளலாம்.

Uri யிலும் பல சங்கங்கள் உள்ளன. இச் சங்கங்களின் செயற்பாடுகள் குறித்து நீங்கள் வசிக்கும் நகரசபை செயலரிடம் கேட்டறிந்து கொள்ளுங்கள் அல்லது நீங்கள் பின்வரும் இணையத்தளமான www.urionline.ch ல் பாருங்கள்.

**விளையாட்டு**

அல்ப்ஸ் மலைப் பிரதேசம் மற்றும் Vierwaldstättersee, Uri யில் பல்வேறு வெளியிட செயற்பாடுகளுக்கு சந்தர்ப்பம் வழங்குகின்றது. விளையாட்டுச் சங்கங்கள் அல்லது தனியாக ஒழுங்கு செய்பவர்களும் பல நகரங்களில் ஓய்வுநேர விளையாட்டு வசதிகளை வழங்குகின்றனர். நீங்கள் வசிக்கும நகரங்களில், உல்லாசப்பயண அலுவலகங்களில் அல்லது கல்வி- மற்றும் கலாச்சாரப் பிரிவின் விளையாட்டுப் பகுதியில் இதற்கான முகவரிகளைக் கேட்டு அறிந்து கொள்ளுங்கள்.



**விழாக்கள்**

Uri மாநிலத்தில் மிகக் கவர்ச்சியான கலாச்சார நிகழ்வுகள் நடைபெறுகின்றன. ஆலய மற்றும் அனைத்துலக ரீதியான பாரம்பரியங்கள் நகரத்திலும் மாநிலத்திலும் பராமரிக்கப்பட்டுகின்றன. வேறு விடயங்களுடன் சமயக் கொண்டாட்டங்கள், ஆலய வருடம் மற்றும் வாழ்க்கை வட்ட கொண்டாட்டங்கள் (பிறப்பு, வெள்ளை ஞாயிறு, திருமணம், தவக்காலம், உயிர்ப்புத் திருநாள், தூயஆவி திருநாள், திருவருகைக்காலம், கிறிஸ்து பிறப்புவிழா போன்றவை). இதைவிடவும் முக்கியமாக சமுதாய முக்கிய விடயங்களான(யூபிலிகள், நகரவிழாக்கள், அரசியல் விழாக்கள்) மற்றும் வருடாந்த பாரம்பரியக் கொண்டாட்டங்களான உபவாச இரவு, ஆவணி 1 கொண்டாட்டம், கில்பி கேர்மஸ் விழா அல்லது சங்கங்கள் மீண்டும் மீண்டும் கொண்டாடுபவையான நாடக மேடையேற்றம், இசைக் கச்சேரிகள், பாடசாலை நிறைவு விழாக்கள் போன்றவை நடைபெறுகின்றன.

சங்கங்கள் குறித்த தகவல்களுக்கு:
www.urionline.ch

நூதனசாலை குறித்த தகவல்களுக்கு:
www.museen-uri.ch

விளையாட்டுத் திடல்கள் குறித்த தகவல்களுக்கு: www.spielplatz-uri.ch

பிள்ளைகள், குடும்பம், இளையோர் மற்றும் பெரியோருக்கான விளையாட்டுக்களை இரவலாகப் பெறுவதற்கு:
**Ludothek Altdorf**
Seedorferstrasse 1, 6460 Altdorf
Telefon: 041 871 00 05
www.ludothek-altdorf.ch

கல்வி- மற்றும் கலாச்சாரப் பிரிவு
**Bildungs- und Kulturdirektion**
Abteilung Sport
Klausenstrasse 4, 6460 Altdorf
Telefon: 041 875 20 64
E-Mail: sport@ur.ch
www.ur.ch/sport

Uri உல்லாசப் பயணம்
**Uri Tourismus**
Tellspielhaus, Schützengasse 11
6460 Altdorf
Telefon: 041 874 80 00
E-Mail: info@uri.info
www.uri.info

Schwingen என்பது சுவிசின் பாரம்பரிய விளையாட்டு, இது மக்களிடையே மிகவும் வரவேற்பைப் பெற்றது. மாநிலத்தில் மற்றும் மத்திய அரச ரீதியான Schwingen விழாக்கள் நடைபெறுகின்றன.

# போக்குவரத்து

### பொதுப் போக்குவரத்து எவ்வாறு நடைபெறுகின்றது?

சுவிஸ் அனைத்துலக ரீதியாக மிக நெருக்கமான பொதுப் போக்குவரத்து வலைப்பின்னலைக் கொண்டுள்ளது.

சுவிஸ் மத்திய தொடரூந்துச்சேவை (SBB), Uri மாநிலத்தில் பேரூந்துகள் மற்றும் சிறிய வாகனங்கள் மூலமாக பயண மாற்றீடு செய்கின்றது.

Halbtax-சந்தாதாரராக ஆவதன் மூலம் தொடரூந்து, பேரூந்துகள் மற்றும் கப்பல்களில் சுவிஸ் நாடு முழுவதும் குறைவான கட்டணத்தில் பயணிக்கலாம்.

### நான் ஒரு வாகனத்தை அல்லது மோட்டார் சைக்கிளைச் செலுத்தும்போது எதை அவதானிக்க வேண்டும்?

வெளிநாட்டிலிருந்து வரும் வாகனச் சாரதிகளுக்கு ஒரு சுவிஸ் சாரதிப்பத்திரம் தேவைப்படும், எப்போதென்றால்:


- அவர்கள் கடந்த 12 மாதங்களாக சுவிசில் வசிப்பவர்களாகவும் இந்தக் காலத்தில் 3 மாதகாலத்துக்கு மேலாக இடைவெளியில்லாமல் வெளிநாட்டில் தங்கிருக்காதவர்களாக இருந்தால்:
- அவர்கள் தொழில் காரணமாக சுவிசில் பதிவு மாற்றப்பட்ட இயந்திர வாகனத்தின் சாரதி அனுமதிப்பத்திர வகை C அல்லது D அல்லது கீழ்த்தரமான C1 அல்லது D1 செலுத்துபவர்கள் அல்லது தொழில் ரீதியாக மக்களைப் போக்குவரத்துச் செய்வதற்கு அனுமதி பெற்றவர்கள்,
- வெளிநாட்டு சாரதி அனுமதிப் பத்திரத்தின் காலக்கெடு முடிந்துவிட்டால்.

ஒரு சுவிஸ் சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதற்கு பின்வரும் சான்றிதழ்களைத் தேடிக்கொள்ள வேண்டும்:

- முழுவதுமாக நிரப்பப்பட்டு கையெழுத்திட்ட விண்ணப்பப் படிவம்
- வசிப்பிடத்தை உறுதிசெய்தல்
- வதிவிட- அல்லது நிரந்தர அனுமதி
- அசல் சாரதிப்பத்திரம்
- தற்போதைய கடவுச்சீட்டு அளவிலான படம்
- ஒரு கண் நிபுணரின் பார்வைச் சோதனை அறிக்கை

மோட்டார் சைக்கிள் ஓடும்போது தலைக்கவசம் அணியக் கடமைப்பட்டுள்ளீர்கள்!

வீதிப் போக்குவரத்துத் திணைக்களம் Uri
**Strassenverkehrsamt Uri**
Gotthardstrasse 77a, 6460 Altdorf
Telefon: 041 875 28 00
E-Mail: assv@ur.ch
www.ur.ch > «Amt für Strassen- und Schiffsverkehr»



### நான் மிதிவண்டியைச் செலுத்தும்போது, எதை நான் அவதானிக்க வேண்டும்?

போக்குவரத்து விதிகள் ஆண், பெண் மிதிவண்டி ஓடுபவர்களுக்கும் செல்லுபடியாகும். வழக்கமாக இதற்காக ஒரு பரீட்சை தேவையற்றது. பாடசாலைக்கு கட்டாயமாகச் செல்லும் வயதை அடையும்வரை பிள்ளைகள் வீதிப்போக்குவரத்தில் மிதிவண்டி ஓடக்கூடாது.

மிதிவண்டி ஓட்டும் ஆண் அல்லது பெண் ஒரு பாதிப்பை ஏற்படுத்தினால், இது தற்காப்புக் காப்புறுதியில் அடங்கும், அதாவது இவர்கள் இப்படியான காப்புறுதியை செய்திருந்தார்களானால். எவராவது தற்காப்புக் காப்புறுதியைச் செய்திருக்காவிட்டால் செய்யப்பட்ட பாதிப்பை தாமே பொறுப்பேற்க வேண்டும். இது பெரும் செலவாக வரலாம், ஆகவே தனிப்பட்ட தற்காப்புக் காப்புறுதியை செய்துகொள்வது சிறப்பானது.

ஒரு மிதிவண்டி தலைக்கவசத்தை அணியுமாறு விதந்துரைக்கப்படுகின்றது.

பொதுப் போக்குவரத்துக் குறித்த தகவல்கள்:
www.sbb.ch (தொடரூந்து, பேரூந்து, கப்பல், தொங்கிச் செல்லும் போக்குவரத்து)
www.aagu.ch (பேரூந்து)
www.seilbahnen-uri.ch (தொங்கிச் செல்லும் போக்குவரத்து)
www.lakelucerne.ch (கப்பல்கள்)

**உங்களுக்குத் தெரியுமா, Uri மாநிலத்தில் 39 தொங்கிச் செல்லும் போக்குவரத்துச் சாதனங்கள் உள்ளதெனவும், இவை பொதுமக்களால் பாவிக்க முடியுமென்பதும்? எமது மலை உலகைக் கண்டுகொள்ளுங்கள்!**

# மொழி மற்றும் மொழி கற்கும் வசதிகள்

### நான் எங்கு டொச் கற்க முடியும்?

Uri யில் தனியாக மற்றும் மற்றவரில் தங்கியிருக்காமல் நடமாடுவதற்கு, டொச் கற்பது அவசியமானது. இது உங்களுக்கு அயலவருடன், உங்கள் பிள்ளைகளின் ஆசிரியர்களுடன், திணைக்களங்களுடன் மற்றும் வேறு நபர்களுடன் தொடர்பை ஏற்படுத்துவதற்கு அவசியமான-தாகும்.

ஆரம்ப வகுப்பில் டொச் கற்க விரும்பும் ஆண்கள் பெண்களுக்கான தற்போதைய டொச் வகுப்பு விபரங்களை நீங்கள் பெற:

தொழில்- மற்றும் மேற்கல்விக்கான நடுநிலையம் Uri
**Berufs- und Weiterbildungszentrum Uri**
Attinghauserstrasse 12, 6460 Altdorf
Telefon: 041 875 20 70
E-Mail: bwz@bwzuri.ch, www.bwzuri.ch

S&I மொழி மற்றும் ஒத்துழைத்து முன்னேற்றுதல் **S&I Sprache und Integration**
Regula Wyss, Bahnhofstrasse 38, 6460 Altdorf
Telefon: 041 871 34 93
E-Mail: info@sprache-integration.ch
www.sprache-integration.ch

### சுவிஸ் டொச்சைக் கற்பது முக்கியமானதா?

புதிய வாழ்க்கை உலகில் நீங்கள் நிலைத்து நிற்க டொச் மொழி போதுமானது. சுவிஸ் பெண்களுக்கும் ஆண்களுக்கும், சுவிஸ் டொச்சை பல வித்தியாசமான பேச்சு வழக்கில் உள்ளதை பேசக் கற்பது எவ்வளவு சிரமம் என்பது தெரிந்துள்ளது.

### நான் எவ்வாறு ஒரு ஆண் அல்லது பெண் மொழிபெயர்பாளரைத் தேடிக்கொள்வது?

சிரமமான மற்றும் முக்கிய கலந்துரையாடல்களுக்கு ஒரு தராதரமுடைய ஆண் அல்லது பெண் மொழிபெயர்ப்பாளரைக் கூட்டிச்செல்வது சிறந்ததென விதந்துரைக்கப்படுகின்றது. இவர்கள் குறித்து மத்திய சுவிஸ் மொழிபெயர்ப்புச்சேவை அறியத்தரும்.

மொழிபெயர்ப்புச்சேவை:
**Caritas Luzern,** Dolmetschdienst
Brünigstrasse 25, 6002 Luzern
Telefon: 041 368 51 51
(அலுவலக நேரத்திற்குப் பின்பான பதிவுத் தொலைபேசி)
Fax: 041 368 52 88
E-Mail: info@dolmetschdienst.ch
www.dolmetschdienst.ch



### நான் எவ்வாறு என்னை சிறப்பாக ஒத்துழைத்து முன்னேற்றிக் கொள்ளலாம்?

ஒரு வெற்றிகரமாக ஒத்துழைத்து முன்னேற்றுதலுக்கான திறவுகோல் டொச் மொழியாகும். எவர் தானகவே விளங்கிக்கொண்டு, தெரிவித்து மற்றும் தானாகவே சமாளிக்க முடியுமானால், Uri மாநில வாழ்வுலகில் திறமையாக நுழைந்து கொள்கிறார். அத்துடன் வசிக்கும் நகரத்தில் மற்றும் மாநிலத்தில் சமுதாய வாழ்வில் துடிப்புடன் சேர்ந்து செயற்பட்டால் அதுவும் இதற்கு உதவிசெய்யும். இதற்கான சந்தர்ப்பங்களை பல சங்கங்கள், விழாக்கள் மற்றும் நிகழ்ச்சிகள் வழங்குகின்றன.

பார்க்க «நாளாந்த வாழ்வு மற்றும் ஓய்வுநேரம்»

டொச் மற்றும் வேறு மொழிகளில் புத்தகங்களை இரவலாகப் பெறுவதற்கு:
Bahnhofstrasse 13, 6460 Altdorf
Telefon: 041 875 22 21
E-Mail: kantonsbibliothek@ur.ch
www.kbu.ch

**உங்களுக்குத் தெரியுமா, வெற்றிகரமாக ஒத்துழைத்து முன்னேறுவதற்கு மொழி ஒரு முக்கிய திறவுகோல் என்பது?**

# விடுமுறை நாட்கள்

| | | |
|---|---|---|
| Neujahrstag | புதுவருடதினம் | 1. தை |
| Heilige Drei Könige | புனித மூவரசர்கள் | 6. தை |
| St. Josefstag (Seppitag) | புனித சூசை திருநாள் (செப்பிநாள்) | 19. பங்குனி |
| Karfreitag | பெரிய வெள்ளி | உயிர்ப்பு விழாக்கு முந்திய விடுமுறைநாள் |
| Ostern | உயிர்ப்புவிழா | வசந்த கால முழுநிலவுக்குப் பின்பான முதல் ஞாயிறு |
| Ostermontag | உயிர்ப்புத் திங்கள் | உயிர்பு ஞாயிறுக்கு அடுத்த திங்கள் |
| Auffahrt | இயேசு வானகம் சென்றது | ஒரு வியாழன், தூயஆவி திருநாளுக்கு 10 நாட்கள் முன்பாக |
| Pfingsten | தூயஆவி திருநாள் | ஒரு ஞாயிறு, உயிர்ப்பு விழாக்கு 49 நாட்களுக்குப் பின்பாக |
| Pfingstmontag | தூயஆவி திருநாள் திங்கள் | தூயஆவி ஞாயிறுக்குப் பின்பாக |
| Fronleichnam | நற்கருணைத் திருவிழா | ஒரு வியாழன், தூயஆவி திருநாளுக்கு 11 நாட்கள் பின்பாக |
| Bundesfeiertag | மத்திய அரசவிடுமுறை | 1. ஆவணி |
| Maria Himmelfahrt | மரியன்னை வானகம் சென்றது | 15. ஆவணி |
| Allerheiligen | அனைத்துப் புனிதர்கள் | 1. கார்த்திகை |
| Maria Empfängnis | மரியா உற்பவித்தது | 8. மார்கழி |
| Weihnachten | கிறிஸ்து பிறப்பு | 25. மார்கழி |
| Stephanstag | ஸ்ரெபான் தினம் | 26. மார்கழி |

விடுமுறை நாட்களுக்கான உரிமை மாநிலத்தின் உத்தரவு, தொழில் பகுதி மற்றும் ஒவ்வொரு தொழில் ஒப்பந்தத்தின்படி மேற்கொள்ளப்படுகின்றது.

உங்களுக்குத் தெரியுமா, மாநிலத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள அதிகமான விடுமுறை தினங்கள் ஒரு கிறிஸ்தவ பின்னணியைக் கொண்டதென?

# மேலதிக முகவரிகள்

சுவிஸ்நாட்டில் வாழ்வதற்கான விபரமான விளக்கங்கள் பலதரப்பட்ட பாசைகளில்
Migraweb – www.migraweb.ch

## ஆலோசனை நிலையங்கள்

ருசை மாநிலத்தில் உள்ள ஆலோசனை நிலையங்கள் குறித்த ஒரு விபரமான பார்வையை நீங்கள் கீழே காணலாம்:

www.ur.ch > «soziale Institutionen»

## குடும்பங்களுக்கான ஆலோசனை மற்றும் உதவி

குடும்பங்களின் கேள்விகளுக்கான துறைசார் நிலையம்
**Fachstelle Familienfragen**
Gotthardstrasse 14, 6460 Altdorf, Telefon: 041 874 13 13
E-Mail: familienfragen@kindundfamilie-uri.ch

தம்பதிகள்-, குடும்பங்கள்- மற்றும் வாழ்வுக்கான ஆலோசனை
**Ehe-, Familien- und Lebensberatung**
தனி ஒருவர், தம்பதிகள் மற்றும் குடும்பத்துக்கான உளவ-ளச் சிகிச்சை நிலையம்
St. Josefsweg 15, 6460 Altdorf, Telefon: 041 870 00 65

சமூகத் துறைசார் நிபுணர்களின் குடும்பங்களுக்கு வழிகாட்டல்
**Sozialpädagogische Familienbegleitung**
kind und familie, Fachstelle Sozialpädagogik
Gotthardstrasse 14, 6460 Altdorf, Telefon: 041 874 13 11
E-Mail: sozialpaedagogik@kindundfamilie-uri.ch

வளர்ப்பு முறையில் கேள்விகள் இருப்பின் ஆலோசனை **Beratung in Erziehungsfragen**
Schulpsychologischer Dienst, Klausenstrasse 4, 6460 Altdorf
Telefon: 041 875 20 90
E-Mail: schulpsychologie@ur.ch

## இளையோர்கள் மற்றும் இளவயதினருக்கான ஆலோசனை

போதைக்கு அடிமையான பிரச்சினையுள்ள மனிதர்களுக்கு ஆலோசனை மற்றும் அரவணைப்பு மற்றும் இளையோர் ஆலோசனை **Beratung und Begleitung für Menschen mit Suchtproblemen und Jugendberatung**
kontakt uri, Gemeindehausplatz 2, 6460 Altdorf
Telefon: 041 874 11 80
E-Mail: mail@kontakt-uri.ch, www.kontakturi.ch

பிள்ளைகள் மற்றும் இளையோருக்கான ஆலோசனை
**Beratung für Kinder und Jugendliche**
Fachstelle Kindesschutz, Klausenstrasse 4, 6460 Altdorf
Telefon: 041 875 20 40
E-Mail: kindesschutz@ur.ch

**JUSESO** இளையோருக்கான ஆன்மீக ஆலோ-சனை **Uri**
**JUSESO Jugendseelsorge Uri**
Kirchplatz 3, 6460 Altdorf, Telefon: 041 871 20 56
E-Mail: juseso@kath-uri.ch

## சமூக மனநோய் நிலையம் மற்றும் உளவள சிகிச்சை

சமூக மனநோயாளர் சேவை
**Sozialpsychiatrischer Dienst**
Seedorferstrasse 6, 6460 Altdorf, Telefon: 041 874 00 20
E-Mail: info@spduri.ch

## நாளாந்த வாழ்வில் உதவி தேவைப்படும் மனிதர்களுக்கு ஆதரவளித்தல்

சுவிஸ் செஞ்சிலுவைச் சங்கம்
**Schweizerisches Rotes Kreuz**
Kantonalverband Uri
Rynächtstrasse 13, 6460 Altdorf
Telefon: 041 874 30 75
E-Mail: info@srk-uri.ch

## அவசர தேவைகளில் இருக்கும் மனிதர்களுக்கான நிலையம்

ஆலய உதவி நிலையம் **Uri**
**Hilfswerk der Kirchen Uri**
Seedorferstrasse 6a, 6460 Altdorf
Telefon: 041 870 23 88
E-Mail: info@hilfswerkuri.ch

## நோயாளர் பராமரிப்பு, வீட்டுப் பராமரிப்பு, குடும்ப உதவி, தாய்மார்- மற்றும் தந்தைமார்-ஆலோசனை

**Spitex Uri**
Dätwylerstasse 15, 6460 Altdorf
Telefon: 041 871 04 04
E-Mail: info@spitexuri.ch
www.spitexuri.ch

## அவசர வேளைக்கான இலக்கங்கள்

பொலிஸ்: 117
தீயணைப்பு: 118
சுகாதாரம்: 144
பல்வைத்திய அவசர அழைப்புச் சேவை: 1811
வைத்திய அவசர அழைப்புச் சேவை: 041 870 03 03

ஒரு அவசர வேளையை அறிவிக்கும்போது நீங்கள் பின்வரும் தகவல்களை கொடுக்க வேண்டும் என்பதைக் கவனத்திற் கொள்ளுங்கள்:

- பெயர் மற்றும் முதற்பெயர்
- எந்த நகரம்?
- என்ன நடந்தது?
- திரும்பி அழைப்பதானால் உங்கள் தொலைபேசி இலக்கம் என்ன?